வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 18.12.2023 திங்கட்கிழமை இதழ் : 350 பக்கங்கள் : 12

# மேலும் இரண்டு காற்று சுழற்சிகள் வடக்கு – கிழக்கில் வெள்ள அபாயம்!

## குளிர் காலநிலை மேலும் இரு நாட்கள் தொடரும்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 18

**வடக்கு - கிழக்கில் தற்போது நீடிக்கும் மழை கால நிலை மேலும் தொடரும். எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக மேலும் இரு காற்று சுழற்சிகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஏற்கனவே வடக்கில் நீர்நிலைகள் நிரம்பியுள்ளன. இந்த நிலையில், முல்லைத்தீவு, கிளி நொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் மேலும் வெள்ள அபாயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில், யாழ். பல்கலைக்கழ கத்தின் புவியியல்துறை மூத்த விரிவுரையா ளர் நா. பிரதீபராஜாவின் தகவல்படி,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் மழை நாளை செவ்வாய்க்கிழமை வரை தொட ரும் வாய்ப்புள்ளது ( சில வேளைகளில் அதற்கு பின்னரும் தொடரும் வாய்ப்புள் ளது). அத்துடன் குளிரான காலநிலை அடுத்த இரு நாட்களுக்கு நீடிக்க வாய்ப்புள்ளது.

இதேவேளை தற்போதைய நிலை யின்படி இந்த மாதம் முடிவடைவதற்கு

11




# ‘சரிகமப’ போட்டியில் கில்மிஷா சம்பியன்!

சென்னை, டிசெ. 18

இந்தியாவின் பிரபல தனியார் தொலைக்காட்சி நிறுவனமான ஷீ தமிழ் நடத்திய சரிகமப இசை போட்டி நிகழ்ச்சியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவரான கில்மிஷா சம்பியன் பட்டத்தை வென்றார். அவருக்கு 10 இலட்சம் (இந்திய) ரூபாய் பரிசு அளிக்கப்பட்டது.

இந்தியாவின் மிகப்பெரும் ஊடக நிறுவனமான ஷீ குழுமத்தின் தமிழ் ஒளிபரப்பான ஷீ தமிழ் தொலைக் காட்சி நிறுவனம் சரிகமப என்ற போட்டியை நடத்துகிறது. இதில் சிறுவர்களுக்கான

11

# முல்லையில் தொடரும் மழை 976 குடும்பங்கள் பாதிப்பு!

முல்லைத்தீவு, டிசெ. 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக 56 கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த 976 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 10 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர் - என்று முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் சி. கோகுலராஜா தெரிவித்தார்.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்து குளங்களும் நீர் நிரம்பி வழிகின்றன முத்து ஐயன் கட்டு குளத்தின் நான்கு வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன. மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றன. தண்ணி முறிப்பு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற் றப்பட்டு வருகின்றன.இந்த குளங்களின் கீழ்

11



# கிளிநொச்சி மாவட்டத்தில் 4,305 பேர் பாதிக்கப்பட்டனர்

கிளிநொச்சி, டிசெ. 18

தொடர்ச்சியான மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 364 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 305

11

# சஜித் தலைமையில் பரந்துபட்ட கூட்டணி!

## டலஸ் அணி எம்.பிக்கள் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 18

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பரந்துபட்ட கூட்டணியை அமைக்கப்போவதாக சுதந்திர மக்கள் பேரவையின் ஜி. எல். பீரிஸ், நாலக கொடஹேவா ஆகி யோர் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலை மையிலான 'சுதந்திர மக்கள் பேரவை'யின் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், கலாநிதி நாலக கொடஹேவா, பேராசிரி யர் சன்ன ஜயசுமண, டிலான் பெரேரா ஆகியோர் ஐக் கிய மக்கள் சக்தியில் இணையவுள்ளனர் என்று தகவல் கள் வெளியாகின.

இந்நிலையில், செய்தியாளர்களை சந்தித்த ஜி. எல். பீரிஸ் கூறுகையில்,

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன்

11

# பாடசாலைகளில் முதலாம் தவணை பெப். 19இல் ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 18

அரச மற்றும் அரச அங்கீ காரம் பெற்ற அனைத்து பாட சாலைகளினதும், 2024ஆம் கல்வி ஆண்டுக்கான் முதலாம் தவணை கற்றல்நடவடிக்கைகள் பெப்ரவரி 19ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2024 பெப்ரவரி 19 ஆரம்பமாகி ஏப்ரல் 10 வரை நடைபெறும்.

11

# அரைகுறை தீர்வு தமிழ் தேசத்தின் பாதுகாப்பை மேலும் சீரழிக்கும்!

## உலக தமிழர் பேரவையை நிராகரித்து 16 புலம்பெயர் அமைப்புகள் அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 18

உலகத் தமிழர் பேரவையின் ஏமாற்று முயற்சிகளை சர்வதேச சமூ கம் புறக்கணிக்க வேண்டும். அரை குறையான தீர்வு தமிழ் தேசத்தின் பாதுகாப்பை மேலும் சீரழிக்கும் - என்று 16 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் கூட்டாக சுட்டிக் காட்டியுள்ளன.

அதுமாத்திரமின்றி தமிழ் மக்க ளுக்கு எதிரான இனப்படுகொலைக்கு சர்வதேச சமூகம் பரிகார நீதியை வழங்கவேண்டும். அத்துடன், தமிழ் மக்களின் சுயநிர்ணய

11

# கூட்டணியை தீர்மானிக்க இன்னமும் காலம் உள்ளது

## உதய கம்மன்பில எம். பி.

கொழும்பு, டிசெ. 18

சஜித் தரப்புடன் இணைவது குறித்து இன்னும் முடி வெடுக்கவில்லை.

எதிர்கால அரசியல் தீர்மானங்களை எடுப்பதற்கு இன்னும் கால அவகாசம் இருக்கிறது என்று சுதந்திர மேலவை இலங்கை கூட்டணியின் உதய கம்மன்பில எம். பி. தெரிவித்துள்ளார்.

ஆளும் தரப்பிலிருந்து விலகி சுயாதீனமாக இயங்கும் சுதந்திர மக்கள் பேரவை ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளதாக அந்தக் கட்சிகளின் எம். பிக்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் மற்றொரு சுயாதீன அணியான விமல் வீரவன்ஸ தலைமையிலான பாராளு மன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவிடம் கேட்ட போது,

“சஜித் தரப்புடன் இணைவது குறித்து இன்னும்

11

# போதைப்பொருளுடன் யாழில் மூவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தப்பட்ட விசேட நட வடிக்கையில் மூன்று பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர்.


நாடளாவிய ரீதியில் நேற்று காலை முதல் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையை பொலிஸார் முன்னெ டுத்தனர். இந்த நடவடிக்கை யாழ்ப்பாணத்திலும் முன் னெடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் திருநெல்வேலி பால் பண்ணைப் பகுதியில் மூவர் கைது

11

# அரசியலில் ஓய்வுபெறும் எண்ணம் எனக்கு இல்லை

## மகிந்த ராஜபக்ஷ



கொழும்பு, டிசெ. 18

அரசியலில் இருந்து ஓய்வு பெறும் எண்ணம் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

ஒவ்வொரு கட்சியும் மாநாடுகளை நடத்த வேண்டும். இதன் மூலம் கட்சியின் பலத்தைக்

11

# இப்படியும் நடக்கிறது

தமிழ்த் தேசிய கட்சிகள் எல்லாமே ஒன்றுபட்டு இயங்க வேண்டும் என்ற கருத்தை இதற்கு முன்னரும் பல தடவைகள் இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

அவ்வாறு ஒன்றிணைந்தால் மாத்திரம் போதுமானது அல்ல என்றும் அவ்வாறு ஒன்றிணைவதுடன் அடுத்து எப்படி இயங்க வேண்டும் என்பது குறித்தும் ஓர் ஒழுங்கான கட்டமைப்பை உருவாக்கவேண்டும் என்பதையுமே தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

அண்மையில் 'மக்களின் மனு' என்ற பெயரில் இயங்கும் வடக்கு - கிழக்கு சிவில் சமூகத்தினர் யாழ்ப்பாணத்தில் நடத்திய அரசியல் கலந்துரையாடலிலும் இதனையே வலியுறுத்தியிருந்தனர்.

தமிழ் கட்சிகளிடையேயான கூட்டு அல்லது ஒற்றுமை என்பது வெறுமனே தேர்தல்களில் யார் வெல்வது என்பதை இலக்கு வைத்ததாக மாத்திரமின்றி அல்லது தேர்தல்களில் அதிக இடங்களைப் பெறுவதை மட்டும் இலக்காகக் கொண்டு அமையக்கூடாது என்றும் அது ஒரு சிறப்பான கட்டமைப்பைக் கொண்டதாக இயங்கவேண்டும் என்பதையும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

அண்மையில் திடீரென்று ஒரு குழுவினர் புதுடில்லி சென்றிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸின் ஏற்பாட்டில் புலம்பெயர் நாடுகளிலிருந்து சிலரும் தாயகத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறீதரன், சி. வி. விக்னேஸ்வரன், முன்னாள் எம். பிக்களான ஞா. சிறிநேசன், எம். கே. சிவாஜிலிங்கம் மற்றும் வேலன் சுவாமிகள் என்று ஒரு குழுவினரும் திடீரென்று புதுடில்லிக்கு சென்றிருந்தனர்.

எப்படி இப்போது திடுதிப்பென்று உலகத் தமிழர் பேரவை என்று கூறிக்கொண்டு ஒரு தனிப்பட்ட குழுவினர் இலங்கைக்கு வந்து பௌத்த தேரர்களுடன் 'இமாலய' பிரகடனம் வெளியிட்டார்களோ அதேபோலத்தான் இந்த புதுடில்லி சென்ற குழுவும் எதுவித முன் ஏற்பாடும் இன்றி புதுடில்லி சென்றிருந்தது.

அவர்களின் நோக்கம் நல்லதுதான் என்றாலும், எதற்காக எதுவித ஏற்பாடுகளும் செய்யாமல் திடீரென்று அங்கே சென்றார்கள் என்பது பயணத்தை ஏற்பாடு செய்தவர்களுக்குத்தான் தெரியும்.

அவர்களின் பயணம் நடந்ததால்தான் உலகத் தமிழர் பேரவையும் இப்படி திடீரென்று இலங்கை வந்ததோ தெரியவில்லை. தாங்கள் ஏப்ரலில் நேபாளத்தில் சந்தித்து தயாரித்த இமாலய பிரகடனத்தை எட்டு மாதங்கள் கழித்து திடீரென்று இலங்கையில் வெளியிட வேண்டிய அவசரம் ஏன் ஏற்பட்டது என்பது தெரியவில்லை.

அதேபோலத்தான் புதுடில்லிக்கு சென்றவர்களும் எதற்காக எந்தவித ஏற்பாடும் - அதாவது யாரை சந்திப்பதற்காக செல்கிறோம் என்ற விடயத்தை தெரிந்துகொள்ளாமலே அங்கே போய் நின்றுகொண்டு யாராவது எங்களைச் சந்தியுங்கள் என்று பகிரங்க அழைப்பு விடுத்துக்கொண்டிருந்தனர்.

ஆனால், அப்படி இல்லாமல் உலகத் தமிழர் பேரவை என்ற பெயரில் இங்கு வந்தவர்களின் சந்திப்புகளுக்கு இங்கிருந்த அவர்களது நண்பர்களாவது ஏற்பாடு செய்திருந்தனர்.

புதுடில்லி பயணம் குறித்து முன்னர் இந்தப் பத்தியில் ஒரு தடவை எழுதியபோதும், தமிழ் கட்சிகளின் ஒற்றுமை பற்றி எழுதியபோதும் இந்த ஊர்க் குருவி ஒரு விடயத்தை முன்னர் சுட்டிக்காட்டியிருந்தது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமைப்படுவதுடன் நின்று விடக்கூடாது என்றும் நமது பிரச்னைகள் தொடர்பாக புதுடில்லிக்கு தெளிவுபடுத்த அவர்கள் தமது பிரதிநிதி ஒருவரை புதுடில்லியிலேயே வைத்திருக்கவேண்டும் என்றும் ஊர்க்குருவி இந்தப் பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தது.

ஆனால், இப்போது அதே யோசனையை நமது தமிழரசின் எம். பி. சிவஞானம் சிறீதரன் அவர்களும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தான் தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவானால் புதுடில்லியில் தமது பிரதிநிதி ஒருவரை நிரந்தரமாக தங்கவைத்து இந்தியாவில் எமது பிரச்னைகளை பற்றி அங்குள்ளவர்களுக்கு தெளிவுபடுத்தவும் இந்தியாவுடன் நெருக்கமாக செயல்படவும் ஏற்பாடு செய்வேன் என்று தெரிவித்திருக்கிறார்.

தமிழரசு கட்சிக்கு யார் தலைவராக வருவார்கள் என்பதும் யாரை தலைவராகத் தெரிவுசெய்யவேண்டும் என்பதும் அவர்களின் கட்சியின் முடிவுதான். ஆனால், தலைவராகத் தெரிவுசெய்யப்படுகின்றவர் தமிழ் மக்களின் எதிர்கால அரசியலையும் தீர்மானிக்கின்ற ஒருவராக இருப்பார் என்பதால் அது யாராக இருந்தால் நல்லது என்பதில் தமிழ் மக்களுக்கும் அக்கறை இருக்கவேண்டியதும் அவசியமானதுதான்.

எதிர்காலத்தில் தமிழரசும் இன்றைய அரசியலின் யதார்த்தத்தை உணர்ந்து, அனைத்து தரப்புகளுடனும் இணைந்து பயணிக்கவேண்டியதும் அவசியமானதுதான்.

அதற்கு தானும் பொருத்தமானவர்தான் என்பதை சிறீதரன் தற்போது உணர்த்தியிருக்கிறார் என்றே தெரிகின்றது.

**- ஊர்க்குருவி.**







நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய கஜமுகாசுர சம்ஹாரம் நேற்று இடம்பெற்ற வேளை... (படங்கள் : வி.கஜீபன்)

# 65 நகர, மாநகர பகுதிகளிலிருந்து 1003 யாசகர்கள் கொழும்பு வருகை

*கொழும்பு, டிசெ. 18*

இலங்கையில் உள்ள 65 நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளில் அண்மையில் நடத்தப்பட்ட யாசகர்கள் தொடர்பான ஆய்வில் அந்த பிரதேசங்களில் இருந்து 1003 யாசகர்கள் கொழும்பு வந்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

ஆய்வு நடத்தப்பட்ட நகர சபைகள் மற்றும் மாநகர சபை பிரதேசங்களில் 3 ஆயிரத்து 661 யாசகர்கள் இருக்கின்றனர் என்றும் தெரிய வந்ததாக சமூக சேவைகள் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் ஆயிரத்து 618 யாசகர்கள் இருக்கின்றனர். கடந்த கொரோனா தொற்று நோய் காலத்தில் சில தூய்மைப்படுத்தும் நிறுவனங்கள் மூடப்பட்டதால், அவற்றில் பணி புரிந்தவர்களில் சிலரும் யாசகர்களாக மாறியுள்ளனர்.

கொழும்பில் வீதி சமிக்ஞை விளக்குகள் இருக்கும் இடங்களில் யாசகம் பெறுவோரில் பெரும்பாலானோர் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

யாசகர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துவதற்காக ரிதிகமவில் நிறுவப்பட்டுள்ள புனர்வாழ்வு மையத்தில் 500க்கும் மேற்பட்ட யாசகர்கள் இருந்து வருகின்றனர்.

அதன் நிர்வாகம் தென் மாகாண சபையிடம் இருந்து வருவதுடன் எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதியில் இருந்து மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் எனவும் சமூக சேவைகள் திணைக்களம் கூறியுள்ளது.

# யாழுக்கு நோய்ப்பட்ட விதை கிழங்கு; விவசாய அமைச்சரின் கவனத்துக்கு!

*யாழ்ப்பாணம், டிசெ. 18*

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட நோய் வாய்ப்பட்ட விதை உருளைக் கிழங்கு தொடர்பாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவின் கவனத்துக்கு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா கொண்டு வந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்காக கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட சுமார் ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் பெறுமதியான 21 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு நோய்ப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள களஞ்சியம் ஒன்றில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் உடனடியாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவை தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு, இது தொடர்பில் தெளிவுபடுத்தியதுடன், இவ்விடயத்தில் கவனம் செலுத்துமாறும் கோரிக்கை விடுத்தார்.

அவருக்கு பதிலளித்த விவசாய அமைச்சர் அமரவீர இவ்விடயம் தொடர்பில் தான் கவனம் செலுத்துவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு உறுதியளித்தார். (ஐ)

# யானை தாக்கி ஒருவர் மரணம்!

*வவுனியா, டிசெ. 18*

தனது தோட்டத்துக்கு வந்த யானைகளை விரட்டச் சென்றவர் யானையின் தாக்குதலில் உயிரிழந்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா - புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 65 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

வாழை, தென்னை, வெற்றிலை பயிரிடப்பட்டிருந்த அவரின் தோட்டத்துக்கு வந்த காட்டு யானையை விரட்டச் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

## யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் – கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp), 0212227141(Sri Lanka)

E.mail : Jamesraj_uk@yahoo.co.uk

ஈழநாடு
Eelanadu
18.12.2023 திங்கட்கிழமை
ඊළනාඩු
சோபகிருது வருடம், மார்கழி 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

## புலம்பெயர் அமைப்புகளின் கவனத்துக்கு!

இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி புலம்பெயர் அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். இந்த விடயத்துக்கு அலி சப்ரி புதியவர் - ஏனெனில், இது ஏற்கனவே முன்னைய வெளிநாட்டு அமைச்சர்களும் - ஏன் கோட்டாபய ராஜபக்ஷவும்கூட கூறிய விடயம்தான். ஆனால், புலம்பெயர் அமைப்புகளுடன் பணியாற்றும் விருப்பத்தை வெளியிட்டுவரும் ஆட்சியாளர்களோ, மறுபுறம் புலம்பெயர் சமூகத்தை பிரித்தாளவே முயற்சிக்கின்றனர். இதுவரையில் புலம்பெயர் சமூகம் தொடர்பில் தெளிவான உறுதியான கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. சில அமைப்புகளையும் தனிநபர்களையும் தடை செய்து இன்னும் சிலரை பணியாற்ற வருமாறு அழைக்கின்றது. உலகத் தமிழர் பேரவையின் இமயமலை பிரகடனத்தை தொடர்ந்து மீண்டும் புலம்பெயர் சமூகம் தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில்தான் புலம்பெயர் சமூகத்துக்கு வெளிவிவகார அமைச்சர் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இங்கு கவனிக்க வேண்டிய ஒரு முக்கிய விடயம் உண்டு. எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இலங்கைக்கான புலம்பெயர் சமூகம் என்பது அடிப்படையில் தமிழர்கள் செல்வாக்கு செலுத்தும் சமூகமாகவே இருக்கின்றது. எனவே, புலம்பெயர் சமூகத்துடன் உரையாடுவது என்பது அடிப்படையில் தமிழர்களோடு உரையாடுவதுதான். ஜனநாயக தளத்தில் பலரும் பலவாறான செயல்பாடுகளை முன்னெடுக்க முடியும். அதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால், தமிழ் மக்களின் பெயரால் விடயங்கள் முன்னெடுக்கப்படும்போது, அதில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். உலகத் தமிழர் பேரவையின் செயல்பாட்டில் அந்த வெளிப்படைத்தன்மை இல்லை. தாயகத்திலுள்ள மக்களின் பெயரால் விடயங்கள் முன்னெடுக்கப்படும்போது, தாயகத்திலுள்ள அரசியல் தலைவர்கள், சிவில் சமூக செயல்பாட்டார்கள், புத்திஜீவிகள் எனப் பலருடன் உரையாடியிருக்க வேண்டும். அது ஓர் அடிப்படையான கடமை. இரகசியமாக செயல்படுவதற்கு இதுவொன்றும் கெரில்லா தாக்குதல் திட்டமல்ல.

புலம்பெயர் சமூக அமைப்புகள் தங்களிடம் பணம் இருப்பதால் அனைத்தையும் தாங்களே தீர்மானிக்க முடியுமென்று எண்ணினால் அது ஒரு மோசமான செயலாகும். புலம்பெயர் நாடுகளில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப தாயகத்திலுள்ளவர்கள் சிந்திக்க வேண்டும் என்று எவருமே எண்ணக்கூடாது. நிதிப் பலத்தால், சில விடயங்களை தாயக மக்களுக்குள் புகுத்தி விடுவதால் உங்கள் வாதங்களை தாயகத்தில் ஏற்றுக்கொண்டு விட்டதாகப் பொருளில்லை.

தாயகத்திலுள்ள மக்களின் பிரதிநிதிகள் மற்றும் இங்கு வாழும் செயல்பாட்டாளர்களே இறுதித் தீர்மானத்துக்கு உரித்தானவர்கள். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறு அமைய வேண்டுமென்று தீர்மானிக்க வேண்டியவர்களும் அவர்களே! தாயக மக்களின் நலனை கருத்தில் கொண்டு செயல்படுகின்றோம் - என்னும் ஒரு சுலோகத்தை முன்வைத்து, அனைத்தையும் நாங்கள் குத்தகைக்கு எடுத்துக்கொள்ள முடியுமென்று புலம்பெயர் அமைப்புகள் எண்ணக்கூடாது. வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்துக்கான முடிவை அவர்களே தீர்மானிக்க வேண்டும். வேறு எவரும் தீர்மானிக்க முடியாது - தீர்மானிக்கவும்கூடாது.

புலம்பெயர் அமைப்புகளின் அணுகுமுறைகள் இந்த அடிப்படையில்தான் அமைய வேண்டும். யுத்தம் நிறைவுற்று பதினான்கு வருடங்கள் சென்று விட்டன. இந்தக் காலத்தில் புலம்பெயர் அமைப்புகளின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட நீதிக்கான அரசியல் ‘லொபி’கள் எவையுமே பெரியளவில் வெற்றிபெறவில்லை. அதேவேளை, புலம்பெயர் சமூகத்தின் பெயரால் தாயகத்திலும் குழு வாதங்கள் அதிகரித்திருக்கின்றன. இதற்கு சில புலம்பெயர் குழுக்களின் செயல்பாடுகளும் பிரதான காரணம். நிதியை கொண்டு தங்களுக்கான அரசியல் குழுக்களை உருவாக்க முயற்சிகளில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக தாயக அரசியலில் குழு வாதங்கள் அதிகரித்திருக்கின்றன.

இமயமலை பிரகடனத்தை ஆதரிப்பதும் ஆதரிக்காமல் விடுவதும் அவரவரின் ஜனநாயக உரிமை. ஆனால், இதன் அடிப்படையிலும் பிளவுற்று விவாதங்கள் செய்ய வேண்டியதில்லை. தமிழ்த் தேசிய தரப்புகள் அனைவரும் ஓரணியில் வருவதற்கான பிரகடனங்களே இப்போதைய தேவையாகும்.

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:*

# ட்ரயல் அட்பாரில் கண்ணீர்விட்டழுது சாட்சியம் வழங்கிய அருட்தந்தை!

கொழும்பு, டிசெ. 18

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்ற 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ட்ரயல் அட் பார் விசாரணையின்போது கத்தோலிக்க அருட்தந்தை மிகவும் உணர்ச்சிவசப்பட்டு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் உடல்களை பார்த்தவேளை தனது மனோநிலை எவ்வாறு காணப்பட்டது என்பதை அருட்தந்தை குருகுலசூரிய அன்டன் ஜூட் ராஜ் பெர்ணான்டோ கண்ணீர் விட்டு அழுதுள்ளார்.

அவரின் சாட்சியத்தின் படி,

அருட்தந்தை ஜோசப் மரியரட்ணம் தலைமையில் ஆராதனை நடந்துகொண்டிருந்தது. காலை 8.45 மணியளவில் பெரும் வெடிப்பு சத்தம் கேட்டது. நான் அவ்வேளை எனது பணிமனையிலிருந்த சி. சி. ரீ. வியை பார்த்துக்கொண்டிருந்தேன். சத்தம் கேட்டதும் நான் வெளியே வந்தேன். என் கண்ணில் மிகவும் பயங்கரமான காட்சிகள் தென்பட்டன. ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் உடல்கள் சிதறுப்பட்டு கிடந்தன. கடுமையாக காயமடைந்தவர்கள் காணப்பட்டனர். தேவாலயத்தின் சுவர்களில் இரத் தக் கறைகள் காணப்பட்டன என அவர் தெரிவித்துள்ளார்.

குண்டுவெடிப்பின் பின்னர் உடனடியாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தேவாலயத்தின் மணிக்கூடு 8.45இற்கு செயல் இழந்திருந்தது என்றும் அருட்தந்தை தெரிவித்துள்ளார்.

ஜனவரி 8ஆம் திகதி மீண்டும் அருட்தந்தை குருகுலசூரிய அன்டன் ஜூட் ராஜ் பெர்ணான்டோ மீண்டும் வாக்குமூலம் வழங்கவுள்ளார்.

# யாழ்பாணத்தில் அனுமதி பெறாத நடைபாதை கடைகளை அகற்றுக!

## வடக்கு ஆளுநர் பொலிஸாருக்கு பணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 18

டெங்கு நுளம்பு அதிகம் பரவும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறிப்பாக வடிகான்களில் நீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருக்கம் அதிகரிதுள்ளது. இதனை கருத்தில் கொண்டு குறித்த வடிகான்களை சுத்தப்படுத்துவதோடு, வீதியோரங்களில் போடப்பட்டுள்ள நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அகற்றுமாறும் பொலிஸாருக்கு வடக்கு ஆளுநர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரின் செயலாளர் மு.



நந்தகோபாலன் ஊடாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த செயல்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சுகாதாரத் தரப்பினர் , உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் ஆளுநர் ஆலோசனை வழங்கி உள்ளார். மறு அறிவித்தல் வழங்கப்படும் வரை யாழ். மாவட்டத்தில் காணப்படும் அனுமதியற்ற நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றுமாறும் ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். டெங்கு நுளம்பு பரவுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம்.சார்ள்ஸ், துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

(ஐ)

# நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 18

இன்று முதல் 5 நாட்களுக்கு நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் மழையுடனான வானிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது,

வடக்கு, கிழக்கு, மேல், தென், சபரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் இந்த விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 18 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - மார்கழி 02
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சஷ்டி




**மேடம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். பழைய சிக்கல்கள் தீரும். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் கவனமுடன் பழகுங்கள். இடம், பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
கடினமான காரியத்தையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புதுவேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமைவெளிப்படும். சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். உங்களின்புதிய முயற்சிகளை அதிகாரிகள் பாராட்டுவார்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்களுக்கு ஒத்தாசையாக இருப்பார்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
இதுவரை இருந்த அலைச்சல், கோபம் யாவும் நீங்கும். தோற்றப் பொலிவு கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. தர்மசங்கடமான சூழல்களில் சிக்குவீர்கள். தர்மசங்கடமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டும்.

**கும்பம்**
திட்டமிட்ட படி காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**மீனம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெறுவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

# எல்லை தாண்டும்போதே மீனவர்கள் கைதாகின்றனர்!

## இந்திய மத்திய அமைச்சர் எல். முருகன்

**சென்னை, டிசெ. 18**

**தமிழக மீனவர்கள் எல்லை தாண்டும்போது கைது செய்யப்படுகின்றனர் என்று என்று மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.**

**புதுச்சேரியில் நேற்று முன்தினம் நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

மேலும், மீனவர்கள் பிரச்னை அண்ணன், தம்பி பிரச்னை இல்லை. இரண்டு நாடுகளுக்கு இடையிலான பிரச்னை. மீனவர்கள் ஆழ்கடலுக்கு சென்று மீன்படிப்பதை ஊக்குவிக்கின்றோம். எல்லை தாண்டாமல் இருக்க மீனவர்களின் படகுகளில் ஜி. பி. எஸ். கருவி பொருத்தியுள்ளோம். ஒரு இலட்சம் மீனவ படகுகளுக்கு செய்மதி தொலைபேசி வசதியை செய்து கொண்டிருக்கின்றோம்.

மீனவர்கள் எல்லை தாண்டும் போது கைது செய்யப்படுகின்றனர். அரசு உடனடியாக தலையிட்டு மீட்டு கொண்டு வருகிறது. இதனை முழுமையாக நிறுத்துவதற்கு ஒரே வழி இரண்டு நாடுகளுக்கும் இடையே சுமூக பேச்சு நடக்க வேண்டும். இரண்டு நாட்டு மீனவர் குழுவினர் கூட்டம் நடைபெற வேண்டும். அந்த கூட்டம் இரு நாடுகளிலும் இருக்கின்ற சூழல் காரணமாக தள்ளிப்போகிறது" - என்றார்.

மேலும், 2047இல் உலகத்துக்கு வழிகாட்டியாகவும் உலகத்தை ஆளும் வல்லரசு நாடாகவும் இந்தியா இருப்பதற்கு இந்த உத்தரவாத வாகன யாத்திரை தொடங்கப்பட்டிருக்கிறது. அடுத்த 25 ஆண்டுகளை நோக்கி இப்போதே அடியெடுத்து வைத்துள்ளோம். திட்டங்களை தொடங்கி இருக்கின்றோம். ஒவ்வொரு குடிமகனும் முற்றிலும் காலனித்துவ மனோபாவத்தை விட்டுவிட்டு தன்னுடைய கடமையுடன் சேவையை செய்ய வேண்டும்.

இந்தியா கூட்டணி ஏற்கெனவே உடைந்துபோன கூட்டணியாக இருக்கிறது. காங்கிரஸ் - கம்யூனிஸ்ட்களும் இணைந்து கேரளாவில் போட்டியிடுவார்களா? மம்தா பானர்ஜி, காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள் இணைந்து மேற்கு வங்கத்தில் போட்டியிடுவார்களா? ஆம் ஆத்மி - காங்கிரஸ் இணைந்து டெல்லியில் தேர்தலை சந்திப்பார்களா? இப்போதே கேஜ்ரிவால் எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை - என்றும் கூறினார். (ஐ)

# பாரதத்தின் கலாசார கோட்டை தென்னிந்தியா பிரதேசமே!

## பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்

*சென்னை, டிசெ. 18*

தென்னிந்தியாவை ஹபாரதத்தின் கலாசார கோட்டை' என்று சொன்னால் மிகையாகாது என மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் புகழாரம் தெரிவித்தார்.

சென்னையில் நேற்று முன்தினம் சமய நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மதுரையைச் சுற்றியுள்ள பகுதியை ஆண்ட பராக்கிரம பாண்டிய மன்னன் சிவன் கோயிலைக் கட்ட விரும்பினார். அதற்காக ஒரு லிங்கம் கொண்டு வருவதற்காக காசிக்கு சென்றார். திரும்பி வரும்போது மரத்தடியில் ஓய்வெடுக்க நின்றார். ஆனால், அவர் தனது பயணத்தைத் தொடர முயன்றபோது, லிங்கத்தை ஏற்றிய வண்டி நகரவில்லை. பராக்கிரம பாண்டியர் இதை இறைவனின் கட்டளை என்று புரிந்து கொண்டு சிவகாசி என்று அழைக்கப்படும் லிங்கத்தை அங்கே நிறுவினார்.

காசிக்கு செல்ல முடியாத பக்தர்களுக்காக பாண்டியர்கள் தென்காசியில் காசி விஸ்வநாதர் கோயிலை கட்டினர். மீனாட்சி அம்மன் மற்றும் சுந்தரேஸ்வரர் திருமணம் வெறும் புராண கதை அல்ல. இது ஆண் மற்றும் பெண் ஆற்றல்களின் தெய்வீக சங்கமத்தை பிரதிபலிக்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை என்பது இந்தியாவின் தனித்துவமான கலாசாரத்தை விவரிக்க அடிக்கடி பயன்படுத்தப்படும் ஒரு சொல்.

இந்தியா ஒரு தேசம் அல்ல, தனித்துவமான மாநிலங்களின் ஒன்றியம் என்ற கருத்தை பரப்புகின்றனர். இந்தியாவின் தேசிய மற்றும் கலாச்சார அடையாளத்தின் இந்த தவறான பிரச்சாரம் வரலாற்று ரீதியாக தவறானது. நமது கலாச்சார ஒற்றுமையின் தேசிய கட்டமைப்பை மோடி தீவிரமாக வலுப்படுத்துகிறார். பிரதமர் மோடியின்தலைமையின் கீழ், ஒட்டுமொத்த தேசமும் உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் ஒன்றிணைக்கப்படுகிறது. தென்னிந்தியா நமது இந்தியப் பண்பாட்டைப் பாதுகாத்தவிதம் நிச்சயம் பாராட்டத்தக்கது. தென்னிந்தியாவை ஹபாரதத்தின் கலாச்சார கோட்டை' என்று சொன்னால் மிகையாகாது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஆளுநர் மனம் மாற வேண்டும்!

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

*சென்னை, டிசெ. 18*

ஆளுநர் மனம்மாறி தமிழகத்தின் நன்மைக்காக செயல்பட வேண்டும் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

'மிக்ஜாம்' புயலால் ஏற்பட்ட சேதத்தை பார்வையிட வந்த மத்திய குழு, சரியான நேரத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது என்று பாராட்டி இருக்கிறது. தி. மு. க. ஆட்சிக்கு வந்த பிறகுதான் முன்னாள் ஐ. ஏ. எஸ். அதிகாரி திருப்புகழ் தலைமையில் குழு அமைத்து, அவர்களது ஆலோசனைப்படி திட்டங்களை தீட்டி வருகிறோம்.

இரண் டரை ஆண்டுகளில் சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகு திகளில் எடுக்கப்பட்ட வெள் ளத் தடுப்பு நடவடிக்கைகள், அதற்கான செலவினம் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் வெகு விரைவில் பொது மக்களின் தகவலுக்காக வெளியிடுவோம்.

3 மாநிலத் தேர்தல் முடிவுகள், மக்களவைத் தேர்தல் முடிவை பாதிக்காது. பா. ஜ. கவுக்கு எதிரான வாக்குகளை அனைத்து மாநிலங்களிலும் ஒன்று சேர்க்கும் முயற்சிகளை 'இந்தியா' கூட்டணி செய்யும். அதன் மூலம் மக்களவை தேர்தலில் வெற்றியை பெறுவோம். தமிழகத்தின் ஆளுநராக ஆர். என். ரவி வந்த பிறகு, பலமுறை அவரை சந்தித்து இருக்கிறேன் பேசி இருக்கிறேன். அரசு விழாக்களிலும் பலமுறை இருவரும் பங்கெடுத்து இருக்கிறோம். அப்போதெல்லாம் என்னிடம் இனிமையாகத்தான் பழகினார் பேசினார்.

எனவே, நாங்கள் இருவரும் சந்திப்பது அல்ல பிரச்னை. ஆளுநர் மனம்மாறி தமிழகத்தின் நன்மைக்காக செயல்பட வேண்டும் என்பது தான் ஒட்டுமொத்த தமிழக மக்களின் எதிர்பார்ப்பு. தமிழக வளர்ச்சிக்கு எதிரான சில சக்திகளின் கைப்பாவையாக செயல்படுவதைத் தவிர்த்து, தமிழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அவர் இருக்க வேண்டும் - என்றும் கூறினார்.

(ஐ)

# மன்னார் - யாழ்ப்பாணம் வீதி வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்!

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

மன்னார், டிசெ. 18

**தொடர்ச்சியாக பெய்துவரும் மழையால் மன்னார் - யாழ்ப்பாணம் வீதி (ஏ-32 வீதி) வெள்ளத்தில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அந்த வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள் அவதானமாக செயல்படுமாறு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.**

பாலியாறு, பறங்கியாறு என்பவை பெருக்கெடுத்து ஓடுகின்றன. இதனால், தேவன்பிட்டி கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இந்த நிலையிலேயே மன்னார் - யாழ்ப்பாணம் வீதி (ஏ-32 வீதி) வெள்ளத்தில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அந்த வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள் அவதானமாக செயல்படுமாறும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் கே. திலீபன் தெரிவித்துள்ளார். (ஐ)



# மாந்தை மேற்கில் வெள்ளத்தால் 131 குடும்பங்கள் இடம்பெயர்வு!

மன்னார், டிசெ. 18

தொடர்ச்சியாக பெய்துவரும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் மாந்தை மேற்கின் தேவன்பிட்டி, பாலியாறு கிராமங்களில் 131 குடும்பங்களை சேர்ந்த 438 நபர்கள் இடம்பெயர்ந்து தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் - யாழ்ப்பாணம் வீதியில் காணப்படுகின்ற பாலியாறு பெருக்கெடுத்ததன் காரணமாக தேவன்பிட்டி கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

தற்காலிக தங்மிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கான உணவை மாந்தை மேற்கு பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் வழங்கி வருகின்றனர்.

மேலும், மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் மாவட்டத்தில் பெரும்பாலான தாழ் நில பிரதேசங்கள் வெள்ள அனர்த்தத்துக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே. திலீபன் தெரிவித்துள்ளார். (ஐ)







# வெளிநாட்டு தூதுவர்கள் மூவர் நல்லை ஆதீனத்துடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ்ப்பாணம் வந்துள்ள மூன்று நாடுகளின் தூதுவர்கள் நல்லை அதீன குரு முதல்வரை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இலங்கைக்கான சுவிற்சர்லாந்து, ஜப்பான், தென்னாபிரிக்கா நாடுகளின் தூதுவர்கள் நேற்று மூன்றுநாள் பயணமாக யாழ்ப்பாணம் வந்தனர்.

இவர்கள், நேற்று முன்தினம் நல்லூர் நல்லை ஆதீன குரு முதல்வர் இல்லத்தில் குரு முதல்வர் சிறீல சிறீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளை சந்தித்தனர்.

சுவிற்சர்லாந்து நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாநிதி சிறி வோல்ட், ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் மிசுகொஷி ஹிடேகி, தென்னாபிரிக்காவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் சாண்டைல் எட்வின் ஷால்க் உள்ளிட்ட 10 பேர் கொண்ட குழுவினர், நல்லை ஆதீன குரு முதல்வர் சிறீல சிறீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், ஆன்மீக சமயத் தலைவர் ரிசி தொண்டு நாத சுவாமிகளையும் சந்தித்தனர்.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் சமய ரீதியான நல்லிணக்க விழிப்புணர்வுகள், சமய தலைவர்களால் எதிர்நோக்கும் மக்கள் ரீதியான பிரச்னைகள், இந்து சமய வளர்ச்சிக்கான அடிப்படைக்கு தேவையான விடயங்கள், கலாசார ரீதியாக எதிர்நோக்கும் விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சட்டவிரோதமாக கடலட்டை கொண்டு சென்ற நால்வர் கைது!

மன்னார், டிசெ. 18

சட்டவிரோதமான முறையில் உலர் கடலட்டைகளைக் கொண்டுசென்ற 04 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மன்னார் கடற்பரப்பில் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்தக் கைது நடைபெற்றது.

இந்த நடவடிக்கையின் போது சந்தேகநபர்கள் பயன்படுத்திய 2 படகுகள் மற்றும் 808 கிலோ உலர் கடலட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் நீர்கொழும்பு மற்றும் கற்பிட்டி பிரதேசங்களில் வசிப்பவர்கள் என்றும், 18 முதல் 50 வயதுக் குட்பட்டவர்கள் என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களும், கைப்பற்றப்பட்ட உலர் கடலட்டைகள் மற்றும் படகுகள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் உதவி கடற்றொழில் பணிப்பாளர் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இளநீர் ஏற்றுமதி மூலம் ரூ. 200 கோடி வருமானம்!

கொழும்பு, டிசெ. 18

நாட்டிலிருந்து ஒவ்வொரு வாரமும் சுமார் 2 இலட்சத்து 52 ஆயிரம் இளநீர் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இளநீர் ஏற்றுமதி செய்வதன் மூலம் 2022 இல் 200 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டு 600 கோடி ரூபாய் வருமானத்தை ஈட்ட எதிர்பார்த்துள்ளதாகவும் கூறியுள்ளது.

இந்நிலையில் இளநீர் தோட்டங்களை ஒரு பெருந்தோட்ட பயிராக பயிரிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



மேலும், உலகில் பல நாடுகள் இளநீர் பயிரிட முயற்சித்தாலும் உலகில் மிகவும் சுவையான இளநீர் இலங்கை இளநீர் என்றும், இலங்கையில் இளநீரை பிரபலமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சாவகச்சேரியில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ்ப்பாணத்தில் மோதலுக்கு தயாரான நிலையில் இருந்த வாள்வெட்டு கும்பலை சேர்ந்த இளைஞர் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையை சேர்ந்த 21 வயது இளைஞனே வாள் ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டுவில் கண்ணன் கோவில் அருகே வாள்வெட்டு கும்பல் ஒன்று மோதலுக்கு தயாராகி வருகிறது என்று சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த தகவலை தொடர்ந்து, பொலிஸார் அப்பகுதிக்கு விரைந்தனர்.

பொலிஸாரை கண்டதும் அங்கிருந்தவர்கள் ஓடிய நிலையில் ஒருவரை துரத்திச் சென்று கைது செய்தனர். இதேநேரம், தப்பியோடிய இருவரையும் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# கார்த்திகை பூ கொடியின் கிழங்கை உண்டவர் மரணம்!

வடமராட்சி, டிசெ. 18

கார்த்திகை பூ கொடியின் கிழங்கை உட்கொண்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு - உடுத்துறையை சேர்ந்த மாரிமுத்து சுப்பிரமணியம் (வயது 47) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

அவர், சில தினங்களுக்கு முன்னர் கார்த்திகை பூக்கொடியின் கிழங்கை உட்கொண்டிருந்தார். இந்த நிலையில், திடீரென சுகவீனமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உயிரிழந்தார். (ஐ-02)

# இலங்கையின் ஸ்திரதன்மை பிராந்திய நலனுக்கு அவசியம்

## இலங்கைக்கான இந்திய தூதுவர் பாக்லே

கொழும்பு, டிசெ. 18

**இலங்கையின் பொருளாதார - அரசியல் ஸ்திரதன்மை என்பது இந்தியாவுக்கு மாத்திரமல்ல, பிராந்திய நலன்களுக்கும் மிகவும் அவசியமான ஒன்றாகும். இலங்கை போன்ற நட்பு நாடொன்று நெருக்கடிகளை எதிர்கொள்ளும்போது அதன் தாக்கம் நிச்சயம் பிராந்தியத்திலும் இருக்கும் என தெரிவித்துள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இரு நாடுகளுக்கு இடையிலான சுற்றுலா, தகவல் தொழில்நுட்ப மற்றும் வலுசக்தி உள்ளிட்ட புதிய இணைப்புகளால் இலங்கை நலனடையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.**

இலங்கையில் மூன்று ஆண்டு கால இந்திய இராஜதந்திர சேவையை வெள்ளிக்கிழமையுடன் உத்தியோகபூர்வமாக நிறைவு செய்த உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, அவுஸ்திரேலியாவுக்கான இந்திய உயர்ஸ்தானிகராக சேவையில் இணையவுள்ளார். இந்நிலையில், இலங்கையின் தனது சேவைக்காலம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே கோபால் பாக்லே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

இலங்கை - இந்திய உறவு என்பது பொருளாதாரத்தை மாத்திரம் சார்ந்ததல்ல. மாறாக கலாசார பின்னணிகள், இரு நாட்டு மக்கள் தொடர்புகள் மற்றும் பாதுகாப்பு என பல்துறைகளில் மிகவும் ஆழமாக இரு தரப்பு உறவுகள் வேரூன்றியுள்ளன. எனவேதான் இலங்கையில் கோவிட் உள்ளிட்ட அண்மைய நெருக்கடிகளில் இந்தியா முதலாவதாக முன்வந்து உதவிகளை செய்தது. அயலுக்கு முதலிடம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இலங்கைக்கு உதவ யாருக்காகவும் காத்திருக்கவில்லை.

குறிப்பாக, அண்மைய பொருளாதார நெருக்கடிகளின்போது எரிபொருள், உணவு மற்றும் மருந்து என பல அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடுகள் ஏற்பட்டன. இதன் போது இந்தியா அவசரமாக செயல்பட்டு இலங்கை மக்களின் அத்தியாவசிய தேவைகளை ஈடு செய்ததது. இதேபோன்றுதான் கோவிட் பெரும் தொற்றின் போது இலங்கை மக்களுக்கு தேவையான அனைத்து தடுப்பூசிகளையும் வழங்கி உதவியது. மறுப்புறம் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தை இலங்கை நாடியப்போது, இந்தியா பக்கபலமாக நின்று ஆதரவு வழங்கியது. எழுத்து மூலமாக சர்வதேச கடன் மறுசீரமைப்புகளுக்கு உத்தரவாதத்தை வழங்கியது.

இலங்கையின் பொருளாதார - அரசியல் ஸ்திரதன்மை என்பது இந்தியாவுக்கு மாத்திரமல்ல பிராந்தியத்துக்கும் மிகவும் அவசியமான ஒன்றாகும். இலங்கை போன்ற நட்பு நாடொன்று நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போது அதன் தாக்கம் பிராந்தியத்திலும் தாக்கம் செலுத்தும். எனவே பிராந்தியத்தில் நட்பு நாடுகள் சவால்களை எதிர்கொள்ளும் போது, அயலகத்திற்கு முதலிடம் என்ற கொள்கையின் அடிப்படையில் இந்தியா தலைமைத்தும் எடுத்து நிலையான தீர்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும். இவ்வாறான ஒத்துழைப்புகள் இலங்கைக்கு மாத்திரம் நன்மையளிக்காது. மாறாக பிராந்திய நலன்களிலும் தொடர்புப்படும்.

இலங்கை - இந்திய இணைப்புகள் முக்கிய உறவுகளில் ஒத்திசைவாகின்றன. வரலாற்று ரீதியிலான பாரம்பரிய இணைப்புகள். அபிவிருத்தி திட்டங்களையும் பொருளாதார உறவுகளையும் உள்ளடக்கியதாக உள்ள இணைப்புகள். மக்கள் - கலாசார இரு தரப்பு இணைப்புகள். இவை அனைத்துமே இரு நாடுகளுக்கு மாத்திரமன்றி இரு நாட்டு மக்களுக்கு பொதுவானதாக உள்ளது. இதனை மையப்படுத்திய இரு நாட்டு சுற்றுலா, தகவல் தொழில்நுட்ப மற்றும் வலு சக்தி உள்ளிட்ட புதிய இணைப்புகளால் இலங்கை நலனடையும் - என்றார். (ஐ)

# மழைவீழ்ச்சி 24 வரை தொடரும் வெள்ளப்பெருக்கு ஏற்படலாம்!

கொழும்பு, டிசெ. 18

வங்காள விரிகுடாவின் கடல் பிராந்தியத்தில் உருவாகியிருந்த காற்றுச் சுழற்சியானது தற்போது இலங்கையின் தென்கிழக்காக காணப்படுவதால், எதிர்வரும் நாட்களிலும் இலங்கைக்கு அதிகளவு மழை வீழ்ச்சியை ஏற்படுத்தும். இதனால், வெள்ளப்பெருக்கு ஏற்படும் என முன்னாள் மூத்த வானிலை அதிகாரி க.சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையின் தெற்காகப் பயணித்து மன்னார் வளைகுடாவின் தெற்காக, அதன்பின்னர் குமரி கடல் பிராந்தியத்தின் தெற்காக சென்று அரபிக் கடல் பிராந்தியத்துக்குள் நுழையும்.

இதன் காரணத்தினால் இலங்கையின் பல பகுதிகளில் அதிகளவு மழை பெய்யும். இதேபோன்று தற்போது தென் சீன கடல் பிராந்தியத்தில் இருந்து வந்து கொண்டிருக்கின்ற இன்னுமொரு காற்று சுழற்சி காரணமாக இது தெற்கு அந்தமான் கடல் பிராந்தியத்தின் ஊடாக நகர்ந்து எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை இலங்கைக்கு அண்மையாக வருவதால் இந்த நாட்களிலும் இலங்கைக்கு அதிகளவு மழை வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

அதுமட்டுமல்லாது அதனை அடுத்தவரும் 27ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையான காலப் பகுதிகளில் கூட மீண்டும் ஒரு காற்று சுழற்சியானது இலங்கைக்கு அண்மையாக வர வாய்ப்புள்ளது.

இதே போன்று அடுத்த வருடம் ஜனவரி மாதம் 03ஆம் திகதி முதல் 06ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இன்னும் ஒரு காற்று சுழற்சி உருவாக சாத்தியம் உள்ளது.

எனவே, மேற்குறிப்பிடப்பட்ட காலப் பகுதிகளில் இலங்கைக்கு அதிகளவான மழை பெய்யும் சாத்தியமுள்ளது. இதில் பெரும்பாலும் அதிக மழையுடன் வெள்ளப்பெருக்கு ஏற்படும் சாத்தியக்கூறுகள் கூட காணப்படுகின்றது.

எனவே, பொதுமக்கள் மிகவும் அவதானமாக செயல்படுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள் எனக் குறித்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# சொகுசு பஸ் மோதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 18

கொழும்பில் இருந்து கட்டுநாயக்கவுக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற சொகுசு பஸ் ஒன்று ஜா - எல பகுதியில் கார், சைக்கிளை மோதி விபத்துக்கு உள்ளானது.

இந்த விபத்தில் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்தார். கந்தானையை சேர்ந்த 29 வயதுடைய நிபுன் தனஞ்சய என்பவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சொகுசு பேருந்து வேக கட்டுப்பாட்டை இழந்ததன் காரணமாகவே விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட சகோதரர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 18

பல பகுதிகளில் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டார்கள் எனக் கூறப்படும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், அவர்கள் கொள்ளையிட்டனர் என்று கூறப்படும் சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

அதுருகிரிய, கடவத்தை, தலங்கம மற்றும் கடுவலைபொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட 18 இடங்களில் கொள்ளையிட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

29, 32 மற்றும் 36 வயதுடைய கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அங்கொடை மற்றும் கடுவலை பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர்.

அவர்களுக்கு எதிராக பல பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர்கள் கடுவலை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று அதுருகிரிய பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பொலிஸாரின் நடவடிக்கையில் 83 பேர் நாடளாவியரீதியில் கைது

கொழும்பு, டிசெ. 18

நாடளாவிய ரீதியில் பொலிஸாரின் விசேட நடவடிக்கைகளின்போது 83 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்தை ஒழிக்கும் விசேட நடவடிக்கையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். இந்த நடவடிக்கையின் காரணமாகவே இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்களில் 45 பேர் போதைப்பொருள் குற்றங்களுக்காக பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இரு லொறிகள் மோதிய விபத்தில் ஒருவர் மரணம்!

கொழும்பு, டிசெ. 18

அம்பலாங்கொடையில் நேற்று அதிகாலை இரு லொறிகள் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் மேலும் இருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் விபத்துக்குள்ளான லொறி ஒன்றின் சாரதி எனவும் அவர் மெட்டியகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிய வருகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 35 கிலோ ஹஷிஸ் போதையுடன் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 18

வத்தளை பிரதேசத்தில் நேற்று நடத்திய விசேட சுற்றிவளைப்பில் 35 கிலோகிராம் 'ஹஷிஸ்' போதைப்பொருளை வைத்திருந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி சுமார் 2 கோடி ரூபாய் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# வெள்ளத்தால் 4,692 பேர் புத்தளத்தில் பாதிப்பு

புத்தளம், டிசெ. 18

நாட்டில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழையால் புத்தளம் மாவட்டத்தில் இது வரை 33 கிராம சேவகர் பிரிவுகளில் ஆயிரத்து 349 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 692 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று புத்தளம் மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், வெள்ளம் காரணமாக இதுவரை 6 வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.



இதன்படி, முந்தல் பிரதேச செயலாளர் பிரிவில் 11 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 741 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 566 பேரும், கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில் 4 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 210 குடும்பங்களைச் சேர்ந்த 871 பேரும், வனாத்தவில்லு பிரதேச செயலாளர் பிரிவில் 3 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 100 குடும்பங்களைச் சேர்ந்த 291 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், நவகத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில் 4 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 18 குடும்பங்களை சேர்ந்த 56 பேரும், கருவலகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவில் 7 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 52 குடும்பங்களைச் சேர்ந்த 178 பேரும், புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் 4 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 228 குடும்பங்களைச் சேர்ந்த 730 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்று புத்தளம் மாவட்ட செயலாளர் எச். எம். எஸ். பி. ஹேரத் தெரிவித்தார். (ஐ)

# 2024இல் ஜனாதிபதி தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும்!

## நீதி அமைச்சர் விஜயதாஜஸ

**கொழும்பு, டிசெ. 18**
**அடுத்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் கட்டாயம் நடத்தப்படும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.**
**கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.**



அரசமைப்பின் படி, கட்டாயம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், பொதுத் தேர்தல் தொடர்பில், இதுவரை எவ்வித கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை என தெரிவித்தார்.

மேலும் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்ட நீதியமைச்சினால் விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் நல்லிணக்க அலுவலகங்களை நிறுவி, கிராமங்களின் பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். (ஐ)

# ஐஸ் போதைப் பொருளை கடத்திச் சென்றவர் கைது

கொழும்பு, டிசெ. 18
டிப்பர் வாகனத்தில் ஐஸ் போதைப்பொருள் கடத்திய ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மெட்டியாகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லெவிதுவ சந்தி பகுதியில் உடனடி வீதித்தடை கடமையில் ஈடுபட்டிருந்த அதிரடிப் படையினரால் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், பாதாள உலகக் குழுத் தலைவர் ஜெயலத் சுத்தா என்ற ராஜூவின் நெருங்கிய சகாவான பொடி ஷன் என தெரிவிக்கப்படுகிறது. இவரிடமிருந்து 7 கிராம் 950 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர் மெட்டியாகொட, மஹவத்த பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடையவர்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மெட்டியாகொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# மொறட்டுவை பல்கலைக்கு புதிய வேந்தர்!

கொழும்பு, டிசெ. 18
மொறட்டுவை பல்கலைக் கழகத்தின் புதிய வேந்தராக பேராசிரியர் மொன்டி காசிம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# வருமான அனுமதிப்பத்திரம் இல்லாத வாகனங்களின் பதிவு நீக்கப்படும்!

கொழும்பு, டிசெ. 18
வருமான அனுமதிப்பத்திரத்தை கொண்டிராத வாகனங்கள் தொடர்பான தகவல்களை திரட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐந்து வருடங்களுக்கு அதிக காலம் வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத வாகனங்கள் தொடர்பில் அனைத்து மாகாண சபைகளிடமிருந்தும் தகவல்களை கோரியுள்ளன என்று மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.

அந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வாகன உரிமையாளர்களுக்கு அது தொடர்பில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

வருமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத வாகனங்களின் பதிவுகளை தமது திணைக்களத்தின் தரவுக் கட்டமைப்பிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (அ)

# அரசாங்க மருத்துவமனைக்கு வரும் நோயாளர் தொகை தினமும் உயர்வு

கொழும்பு, டிசெ. 18
கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் மருந்துகளின் விலை அதிகரிப்பு காரணமாக அரச மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தமையே இந்த நிலைமைக்கான காரணம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் மருத்துவர் சமில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைவதற்கு முன்னர், நாட்டில் 50 வீதமான நோயாளிகள் பொது மருத்துவமனைகளின் வெளிநோயாளர் பிரிவுக்கும் மேலும், 50 வீதமானவர்கள் தனியார் மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவ நிலையங்களுக்கு சென்றதாகவும் கூறியுள்ளார்.

இருப்பினும் தற்போது மருந்துகளின் விலை அதிகரிப்பு காரணமாக அரச மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. மேலும், சில நோயாளிகள் மேம்பட்ட சிகிச்சை முறைகளை நாடுவதும், மருத்துவ பரிந்துரைகளின்றி சட்டவிரோதமாக மருந்துகளை உட்கொள்வதும் அவதானிக்கப்பட் டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனவே, நோயாளிகளுக்கு அத்தியாவசியமான மற்றும் அடிக்கடி பயன்படுத்தப்படும் மருந்துகளின் பட்டியலை உடனடியாக தயாரித்து அவற்றின் விலையை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் மருத்துவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கடவையில் வீதியை கடந்தவர்களை பேருந்து மோதியதில் இருவர் காயம்!

கொழும்பு, டிசெ. 18
வீதி கடவை ஊடாக வீதியை கடந்த குடும்ப சுகாதாரப் பணியாளர்களை பேருந்து மோதியதில் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை சுகாதார மருத்துவ கல்லூரியில் பயிற்சி பெற்று வரும் இரண்டு குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

களுத்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை முன்பாக வெள்ளைக் கோட்டின் ஊடாக வீதியை கடக்க முயன்ற போதே கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் இவர்களை மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஓட்டோ - பேருந்து விபத்து ஒருவர் பலி; மூவர் படுகாயம்!

கொழும்பு, டிசெ. 18
முச்சக்கர வண்டியும் தனியார் பேருந்தும் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்தனர்.

காலி - மாத்தறை பிரதான வீதியில் கோக்கல சிங்கதீவர கிராமம் அருகே நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், அஹங்கம,மிதிகம ஜனாவாச பிரதேசத்தை 29 வயதான ஜயசேகர விதானகே என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் நண்பரின் திருமணத்துக்கு சென்றுவிட்டு ஏனைய நண்பர்கள் மூவருடன் ஓட்டோவில் பயணித்தனர். அப்போது எதிரே வந்த பேருந்துடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில், படுகாயமடைந்தவர்கள், கராப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# தரமற்ற கற்றல் உபகரணங்களால் மாணவர்களின் உயிருக்கு ஆபத்து!

கொழும்பு, டிசெ. 18
தரமற்ற பாடசாலை உபகரணங்களை பயன்படுத்துவதால் மாணவர்களின் உயிருக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சட்டத்துக்கு புறம்பாக பல்வேறு முறைகளின் ஊடாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட தரமற்ற பாடசாலை உபகரணங்கள் ஊடாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பென்சில்கள் மற்றும் வர்ண (கலர்) பென்சில்கள் அல்லது வர்ண பென்சில் குச்சிகளில் பூசப்பட்ட மை தரமற்றவையாக உள்ளன. இதனால், குழந்தைகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

ஈயம் போன்ற கன உலோகங்கள் வாய்வழி உட்கொள்ளல் மூலம் உடலுக்குள் நுழைய வாய்ப்பு உள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச தரத்தின்படி, குழந்தைகள் பயன்படுத்தும் பென்சில்கள் மற்றும் வர்ண பென்சில்கள் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் 19 கனரக உலோகங்களிலிருந்து பாதுகாப்பை வழங்கும் நுC71-3 என சான்றிதழ் பெற்றுள்ளன.

இதற்கிடையில், குழந்தைகள் உணவின் மூலம் நேரடியாக உடலுடன் தொடர்பு கொள்ளும் தண்ணீர் போத்தல்கள் மற்றும் மதிய உணவு பெட்டிகள் போன்ற பிளாஸ்டிக் பாத்திரங்களைப் பயன்படுத்தும் போது கவனமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சந்தையில் இருந்து கொள்வனவு செய்யும் போது உபகரணங்களில் அடிப்பகுதியில் 5 என்ற எண் எழுதப்பட்டிருந்தால், அவை பயன்படுத்த ஏற்றவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

# 54 நீதிபதிகள், நீதிவான்கள் ஜனவரி முதல் இடமாற்றம்!

கொழும்பு, டிசெ. 18
ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில், 54 நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், நீதிவான்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். நீதிச் சேவை ஆணைக்குழு இந்த இடமாற்றங்களை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வருடாந்த இடமாற்றங்களின் கீழ் சேவையின் தேவைகளின் அடிப்படையில் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கிளிநொச்சி, கடுவலை, பூகொடை, மாரவில, களுத்துறை, மாத்தளை, எல்பிட்டிய, மொனராகலை, புத்தளம், அநுராதபுரம் ஆகிய மாவட்ட நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், மட்டக்களப்பு, ஹோமாகம, நீர்கொழும்பு, பண்டாரவளை, நுவரெலியா, கேகாலை, எல்பிட்டிய, பலப்பிட்டிய, மதவாச்சி, நொச்சியாகம, நாவுல, ஆனமடுவ, அகுண கொலபலஸ்ஸ மற்றும் கஹடட்ட கஸ்திகிலிய ஆகிய நீதிவான்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# இந்தியாவுக்கு திருமலையை வழங்கினால் போராடுவோம்!

## ரிஷாத் பதியுதீன் எம். பி.

**திருகோணமலை, டிசெ. 18**

**திருகோணமலையின் ஒரு பகுதியை இந்தியாவுக்கு வழங்குவதாக இருந்தால் - மக்களுக்கு பாதகமான விளைவு ஏற்படுமாக இருந்தால் நாங்களும் மக்களுடன் சேர்ந்து போராடுவோம் என மக்கள் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலையின் ஒரு பகுதியை இந்தியாவுக்கு வழங்குவதாக இருந்தால்- அங்கு இருக்கின்ற மக்களுக்கு ஆபத்து ஏற்படும் வகையில் அதை அனுமதிக்க முடியாது. அவர்களை வெளியேற்றுவதாக இருந்தால் இந்த வீட்டைவிட அழகான வசதியுள்ள வீடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

தற்போது இருக்கின்ற தொழில் வாய்ப்புகளை விடவும் மிகவும் அழகான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அப்படி நஷ்டஈடுகளை கொடுத்து செய்வது பரவாயில்லை. அப்படி இல்லாமல் பலவந்தமாக மக்களை வெளியேற்றி காணிகளை அபகரித்து கொடுத்தால் அதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம் அதற்கு எதிராக மக்களோடு சேர்ந்து போராட்டம் செய்வோம் செய்வோம் - என்றார். (ஐ)

## கிழக்கு மாகாண மாணவர்களுக்கு பாதணி வவுச்சர்கள் வழங்கல்!



திருகோணமலை, டிசெ. 18

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்கு பார்வைக்கு அமைவாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் வழிகாட்டலின் பேரில் கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் பாதணி வவுச்சர்களை வழங்கும் செயல்பாடு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணம் முழுவதிலும் உள்ள 677 கிராமிய பாடசாலைகளை சேர்ந்த ஒரு இலட்சத்து 57 ஆயிரத்து 698 மாணவர்களை இனங்கண்டு ஒருவருக்கு 3000 ரூபாய் பெறுமதியான இலவச பாதணி வவுச்சர்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.




## மட்டக்களப்பு கச்சேரியில் ஒளிவிழா சிறப்புற நடந்தது

மட்டக்களப்பு, டிசெ. 18

மட்டக்களப்பு மாவட்ட செயலக ஒளி விழா நிகழ்வானது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறீகாந்த் தலைமையில் மாவட்ட செயலக வளாகத்தில் வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

அதிதிகளின் மங்கள விளக்கு ஏற்றலுடன் ஆரம்பமாகிய இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அருட்தந்தையர்களான எம். ஸ்ரனிஸ்லஸ் மற்றும் பி. அருள்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த உலகின் சாந்தி சமாதானம் பிறக்க வேண்டும் என்பதற்காக அவதரித்த கிறிஸ்த்துவின் பிறப்பினை கொண்டாடும் விதமாக ஒளி விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாவட்ட செயலக நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்நிகழ்வில், உத்தியோகத்தர்களினால் கரோல் கீதம் இசைக்கப்பட்டதுடன் சிறார்களின் கண்கவர் கலை நிகழ்வுகளும், சிறப்பு சொற்பொழிவும் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலர் இதன்போது கலந்து கொண்டிருந்ததுடன், இதன்போது உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், கற்றல் உபகரண தேவைப்பாடுள்ள பிள்ளைகள் சிலருக்கு இதன் புத்தகப் பை வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் தொடர் மழை; பல குளங்கள் வான்பாய்கின்றன

## வீதிகளில் வெள்ளம்; மக்கள் சிரமம்

மட்டக்களப்பு, டிசெ. 18

தற்போது வடகீழ் பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சி அதிகரித்துள்ளதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தாழ் நிலங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. இதனால், பல ஏக்கர் வயல் நிலங்கள் தண்ணீரில்மூழ்கியுள்ளன.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசத்தில் அமைந்துள்ள வெல்லாவெளி - மண்டூர் பிரதான வீதியில் இரண்டு இடங்களை ஊடறுத்து வெள்ள நீர் பாய்கிறது. இதனால் அவ்வீதியை பயன்படுத்தும் பயணிகளும் பொதுமக்களும் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், இந்த மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதான குளங்களில் நீர்மட்டமும் அதிகரித்துள்ளன என்று இந்தக் குளங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.







அந்த வகையில், உன்னிச்சைக்குளத்தின் நீர்மட்டம் 30 அடி 9 அங்குலமும், உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 16 அடி 6 அங்குலமும், அக்குளத்தில் 10 அங்குலத்தில் மேலதிக நீர் வெளியேறுகிறது.

வாகனேரி குளத்தின் நீர்மட்டம் 16 அடி 11 அங்குலமும், கட்டுமுறிவு குளத்தின் நீர்மட்டம் 6 அடியும், வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் 16 அடி 5 அங்குலமும், அக்குளத்தில் 12 அங்குலத்தில் மேலதிக நீர் வெளியேறுகிறது. வடமுனைக்குளத்தின் நீர்மட்டம் 13 அடி 6 அங்குலம் அக்குளத்தில் 12 அங்குலத்தில் மேலதிக நீர் வெளியேறுகிறது.

புணானை அணைக்கட்டு 4 அடி 7 அங்குலமும், தும்பங்கேணிக்குளத்தின் நீர்மட்டம் 16 அடி 2அங்குலமும், நவகிரிக் குளத்தின் நீர்மட்டம் 30 அடி 2 அங்குலமும் அதிகரித்துள்ள நிலையில், அக்குளத்தின் 2 வான் கதவுகள் 2.5 உயரத்தில் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் அக்குளங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

# போதைப் பொருள் வியாபாரம் குறித்து தகவல் வழங்குவதற்கு தொலைபேசி!

மட்டக்களப்பு, டிசெ. 18

மட்டக்களப்பில் போதைப் பொருள் வியாபாரிகள் தொடர்பாக தகவல் வழங்குபவரின் தொலைபேசி இலக்கத்தை பொலிஸாருக்கு காட்டாத 071 859 8840 என்ற புதிய தொலைபேசி இலக்கம் ஊடாக போதை வியாபாரிகள் குறித்த தகவலை வழங்குமாறு மூத்த பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ.எதிரிமான பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று சனிக்கிழமை புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்துவைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பதில் பொலிஸ் மா அதிபரின் விசேட போதை பொருள் ஒழிப்பு திட்டத்தின்கீழ் பொது மக்களிடமிருந்து பொதைபொருள் வியாபாரிகளது தகவலை பெறுவதற்கான புதிய பெறிமுறையாக இந்த தகவல் வழங்குபவரின் தொலைபேசி இலக்கத்தை பொலிஸாருக்கு காட்டாத புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்த புதிய பொறிமுறைக்கமைய மாவட்டத்தில் போதை பொருளை ஒழுப்பது தொடர்பாக மாவட்டதிலுள்ள 14 பொலிஸ் நிலைய பிரதேசங்களில் இந்த புதிய தொலைபேசி இலக்கம் பொதுமக்கள் பார்வைக்கு காட்சிபடுத்தப்படும்.



எனவே, பொதுமக்கள் பயமின்றி போதை பொருள் வியாபாரிகள் தொடர்பான தகவல்களை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 071 859 8840 என்ற இலக்கத்தின் ஊடாக அறியப்படுத்தி இந்த மாவட்டத்தில் மட்டுமல்ல இந்த நாட்டிலுள்ள எதிர்கால சந்ததிகளை இந்த போதை பொருள் பாவனையில் இருந்து மீட்பதற்காக ஆபாதை பொருள் வியாபாரிகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு பொதுமக்களிம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

# வெள்ளைக் கொடி வைத்திருந்த பணய கைதிகள் சுட்டுக்கொலை!

## மன்னிப்பு கேட்டார் இஸ்ரேல் பிரதமர் டெல்அவிவில் எதிர்ப்பு போராட்டங்கள்

டெல்அவிவ், டிசெ. 18

**சனிக்கிழமை மூன்று பணயக் கைதிகளை தவறுதலாக இஸ்ரேல் சுட்டுக் கொன்றது. இந்த சம்பவத்துக்கு கடும் எதிர்ப்புகள் டெல்அவிவில் உருவாகியுள்ளன. பணயக் கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டபோது தடி ஒன்றில் வெள்ளை துணியை வைத்திருந்தனர் என்று இஸ்ரேலிய பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.**



இஸ்ரேலில் இருந்து ஹமாஸ் அமைப்பு பிடித்துச் சென்றதாகக் கூறப்படும் யொட்டாம் ஹைம், சமெர் தலக்கா, அலோன் சர்மிஸ் என்ற மூன்று பணயக் கைதிகளே இவ்வாறு தவறுதலாக சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காஸாவின் வடபகுதியில் நடவடிக்கையில் ஈடுபட்ட இஸ்ரேலிய படையினரால் இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலிய படையினரின் ஆரம்பகட்ட விசாரணைகள் மூன்று பணயக்கைதிகளும் ஒரு கட்டடத்திலிருந்து மேலாடை இல்லாமல் வெளியே வந்தனர். ஒருவரின் கையில் தடியுடன் வெள்ளை கொடி காணப்பட்டது.

அவர்கள் பத்து மீற்றர் இடைவெளியில் காணப்பட்டதால் படை சிப்பாய் ஒருவர் அச்சமடைந்தார். அவர்கள் பயங்கரவாதிகள் என அறிவித்து துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டார். இதில், இருவர் உடனடியாக கொல்லப்பட்டனர். காயமடைந்த மற்றைய நபர் கட்டிடத்திற்குள் ஓடினார் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்

கட்டடத்தின் உள்ளேயிருந்து ஹீப்ருமொழியில் கூக்குரல் கேட்டது. அந்தப் பிரிவுக்கான தளபதி உடனடியாக யுத்த நிறுத்தத்தை அறிவித்தார். எனினும் காயமடைந்த மூன்றாவது நபர் வெளியே வந்ததும் உடனடியாக சுடப்பட்டார்.

இந்த பணயக் கைதிகளை ஹமாஸ் கைவிட்டிருக்கவேண்டும் அல்லது ஹமாஸ் உறுப்பினர்கள் தப்பியோடியிருக்க வேண்டும் என தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை இந்த சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்ரேலில் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

டெல்அவிவில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான மக்கள் அவர்களை (பணயக் கைதிகளை) தாயகம் கொண்டுவாருங்கள் என கோசமிட்டனர்.

எங்களுடைய பெரும் அச்சம் நிஜமாகியுள்ளது உயிருடன் இருந்த பணயக்கைதிகள் கொல்லப்பட்டனர் என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஒருவர் தெரிவித்துள்ளார்.

எங்களுக்கு உடல்களோ உடல் பைகளோ தேவையில்லை அனைத்து பணயக்கைதிகளும் விடுதலையாகும் வரை யுத்த நிறுத்தமே அவசியம் என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஜனாதிபதி தேர்தலில் புடின் சுயேச்சையாகவே போட்டி!

மொஸ்கோ, டிசெ. 18

ரஷ்யாவில் எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் விளாடிமிர் புடின் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார்.

இது குறித்து ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தவை வருமாறு,

ரஷ்யாவில் வரும் மார்ச் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆளும் ஐக்கிய ரஷ்யா கட்சியின் சார்பில் போட்டியிடப்போவதில்லை. அவருக்கு அந்தக் கட்சி முழு ஆதரவு அளித்தாலும், அவர் சுயேச்சை வேட்பாளராகவே போட்டியிடவுள்ளார் என்று கட்சி வட்டாரங்கள் கூறின என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

ரஷ்யாவில் சுமார் 25 ஆண்டுகளாக ஆட்சி செலுத்தி வரும் புடின், அடுத்த ஆண்டு மார்ச் 17-ஆம் திகதி நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் 5ஆவது முறையாகப் போட்டியிடுகிறார். அதற்கு வசதியாக, ஏற்கெனவே பாராளுமன்றத்தில் அரசியல் சாசனத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் திருத்தத்தின் கீழ் அவரால் மேலும் 2 முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு, வரும் 2036-ஆம் ஆண்டு வரை ரஷ்ய ஜனாதிபதியாக தொடர முடியும். (ஐ)

# இஸ்ரேலின் மொசாட் உளவாளி ஈரானில் தூக்கிலிடப்பட்டார்!

தெஹ்ரான், டிசெ. 18

இஸ்ரேல் உளவாளி ஒருவர் ஈரானில் தூக்கில் இடப்பட்டார் என்று அந்நாட்டு அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஈரான் அரசு தொலைக்காட்சி வெளியிட்ட செய்தியில்,

“இஸ்ரேல் உளவு நிறுவனமான மொசாட் உட்பட வெளிநாட்டு உளவு அமைப்புகளுடன் தொடர்புடைய ஒருவர் (விவரம் தரப்படவில்லை) சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். ஈரான் பாதுகாப்பு தொடர்பான இரகசிய தகவல்களை வெளியிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த அவருக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தென்கிழக்கு சிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணத்தின் ஜாஹேதான் நகரில் உள்ள சிறையில் அவருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது” என்று தெரிவித்துள்ளது.

கடந்த 2022 ஏப்ரலில் மொசாட் உடன் தொடர்புடைய 3 பேர் கைது செய்யப்பட்டனர் என்று ஈரான் உளவு அதிகாரிகள் தெரிவித்தனர். இந்நிலையில் தூக்கிலிடப்பட்டவர் இந்த மூவரில் ஒருவரா என்பது தெரியவில்லை. தங்கள் நாட்டை உளவு பார்ப்பதாக ஈரானும் இஸ்ரேலும் பரஸ்பரம் குற்றம் சாட்டி வருகின்றன. இரு நாடுகளும் பல ஆண்டுகளாக நிழல் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன - என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகின் மிகப்பெரிய வர்த்தக மையம் இந்தியாவில் திறந்து வைக்கப்பட்டது!

புதுடில்லி, டிசெ. 18

உலகின் மிகப்பெரிய வர்த்தக மையமான சூரத் வைர பங்குச்சந்தையை நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்திய பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

இந்தியாவின் வைர தொழில் தலைநகரமாக குஜராத்தின் சூரத் நகரம் காணப்படுகின்றது. உலகின் 90 சதவீத வைரங்கள் இங்கு பட்டை தீட்டப்படுகின்றன என்று கூறப்படுகிறது. வைரத்தை வெட்டுதல், பட்டை தீட்டுதல் மற்றும் வியாபாரத்தில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைத்து செயல்படும் விதமாக, ‘சூரத் வைர பங்குச்சந்தை’ என்ற மிகப் பெரும் பணிமனை அமைக்கப்பட்டுள்ளது.

சூரத் வைர நகரில் 35 ஏக்கர் நிலப்பரப்பில், 15 மாடிகளைக் கொண்ட 9 செவ்வக வடிவ அமைப்புகளாக இந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பணிமனை கட்டட வளாகத்தின் மொத்த தள பரப்பளவு 70 இலட்சத்து 10 ஆயிரம் சதுர அடி ஆகும்.

டில்லியைச் சேர்ந்த கட்டடகலை நிறுவனமான மார்போ ஜெனிசிஸ் சுமார் 4 ஆண்டுகளில் இந்தக் கட்டடத்தை கட்டி முடித்துள்ளது. இதற்கான மொத்த செலவு 3 ஆயிரம் கோடி இந்திய ரூபாயாகும்.

உலகிலேயே மிகப்பெரிய பணிமனை கட்டடமாக இருந்த பென்டகனை சூரத் வைர வர்த்தக மைய கட்டடம் முந்தியுள்ளது. (ஐ)



# நொத்த - டாம் மாதா தேவாலயத்தின் கூரையில் தங்க சேவல் பிரதிஷ்டை

பாரிஸ், டிசெ. 17

பாரிஸில் மீளப் புத்துயிர் பெற்றுவரும் நொத்த - டாம் மாதா தேவாலயத்தின் கூம்பு கூரையின் உச்சியில் தங்கச் சேவல் சிலையைப் பிரதிஷ்டை செய்யும் மத வைபவம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. புதிய சிலையை பிரெஞ்சு வரலாற்று நினைவுச் சின்னங்களின் தலைமை கட்டட கலைஞர், பிலிப் வில்லுவ் வடிவமைத்துள்ளார்.

கத்தோலிக்க விழிப்புணர்வு மற்றும் இயேசுவின் மீள் வருகையைக் குறிக்கின்ற புனித சின்னமாகிய அந்தச் சிலை பிரதிஷ்டை செய்யப்படுவதற்கு முன்பாக பாரிஸ் பேராயர் ஆசி திருப்பலி பூசையை நடத்தினார்.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது அவருக்கு அணிவிக்கப்பட்ட முள் முடி எனக் கூறப்படுகின்ற கிரீடத்தின் ஒரு சிறு பாகம் உட்பட வரலாற்று முக்கியத்துவம் மிக்க புனித பொருட்கள் சில இந்த சேவல் சிலையின் உள்ளே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

பாரிஸ் நகரில் வரலாறு - பண்பாடு - மதம் சார்ந்த மிக முக்கிய அம்சங்களில் ஒன்றான இந்த தேவாலயம் 2019 ஏப்ரலில் திடீரெனத் தீக்கிரையாகி



அதன் வானளாவிய கோபுர கூரை எரிந்து சாம்பராகி வீழ்ந்த சம்பவம் உலகெங்கும் பெரும் உணர்ச்சிப் பெருக்கை ஏற்படுத்தியது. இந்த விபத்தில் கூரையின் உச்சியில் இருந்த வெண்கல சேவல் சிலையும் சேதங்களுடன் மீட்கப்பட்டிருந்தது.

மீள புதுப்பிக்கப்படும் ஆலயம் கிட்டத்தட்ட அதன் முந்திய நிலைக்கு உயிர்பெறுவதைக் குறிக்கின்ற முக்கிய கட்டங்களில் ஒன்றாகக் கூரைக் கோபுர உச்சியில் - தரையில் இருந்து 96 மீற்றர்கள் உயரத்தில்- கத்தோலிக்க புனித பொருட்கள் உள்ளடங்கிய சேவல் சிலையை நிறுவப்பட்டது. கூரையில் நிறுவப்பட்டிருந்த பழைய வெண்கலச் சேவல் சிலைக்குப் பதிலாகவே இப்போது தங்க சேவல் சிலை மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

தீ விபத்தின் சேதங்களுக்கு நடுவே இருந்து மீட்கப்பட்ட பழைய சிலைக்குள் பேணி வைக்கப்பட்டிருந்த புனிதப் பொருள்கள் அனைத்தும் பாதுகாப்பாக எடுக்கப்பட்டுப் புதிய தங்கச் சிலைக்குள் வைக்கப்பட்டுள்ளன. சேதமடைந்த பழைய சிலை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

புனருத்தாரணம் செய்யப்பட்ட மாதா தேவாலயம் அடுத்த ஆண்டு டிசெம்பரில் புனித பாப்பரசரால் திறந்துவைக்கப்படவுள்ளது. (ஐ)

# 2024 ஜனவரி முதல் ஒவ்வொரு குடும்பமும் 20,467 ரூபா வற் வரி செலுத்த வேண்டும்!

## நடுத்தர, ஏழை குடும்பங்களுக்கு பெரும் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 18

**2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு குடும்பமும் 20 ஆயிரத்து 467 ரூபாய் வற் வரி செலுத்த வேண்டும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாராம் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் மூத்த பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.**

15 வீதமாக இருக்கும் வற் வரியை 18 வீதமாக அதிகரிக்கும் வரி திருத்தச்சட்டம் இவ்வாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

வற் வரி அதிகரிப்பின் மூலம் பொருட்கள், சேவைகளின் விலைகள் பெருமளவில் உயர்வடையும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தியாவசிய பொருட்கள், எரிபொருள், எரிவாயும் உட்பட பல்வேறு மட்டத்தில் இதன் தாக்கம் இருக்கும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரசாங்கம் எதிர்பார்க்கும் வரி வருமான இலக்கை அடைந்துக்கொள்ள ஒவ்வொரு குடும்பத்திடமும் இருந்து மாதாந்தம் 20 ஆயிரத்து 467 ரூபாயை வரியாக அறவிட வேண்டும் என பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

இதேநேரம், 2024ஆம் ஆண்டு இறுதியில் ஒவ்வொரு குடும்பமும் 2 இலட்சத்து 45 ஆயிரத்து 604 ரூபயை வரியாக செலுத்தியிருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். வற் வரி அதிகரிப்பின் மூலம் பல இலட்சக்கணக்கான குடும்பங்கள் ஒருவேளை அல்லது இரண்டு வேளை உணவை மாத்திரமே தினமும் எடுத்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். வற் வரி அதிகரிப்பு நடுத்தர, ஏழை குடும்பங்களை பெரியளவில் பாதிக்கும் எனவும் பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (அ)

- கொழும்பு மாநகர எல்லைக்குள்-

# ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய 558 மரங்கள் அடையாளம்!

கொழும்பு, டிசெ. 18

கொழும்பு நகரில் 100 ஆண்டுகளுக்கும் மேலான ஆபத்தான நிலையை ஏற்படுத்த வல்லன என்று 558 மரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று கொழும்பு மாநகர சபை ஆணையாளர் பத்ராணி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட 558 மரங்களில் 214 மரங்கள் கொழும்பு மாநகர சபையின் தலையீடு மூலமாக வெட்டி அகற்றப்பட்டன என்று ஆணையாளர் தெரிவித்தார்.

“மற்ற நகரங்களுடன் ஒப்பிடுகையில், கொழும்பில் அதிக மரங்கள் உள்ளன. சில மரங்கள் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை. இந்த மரங்களை பாதுகாக்கும் முயற்சியில் கிளைகளை வெட்டி மரங்களை சமப்படுத்த பெரும் முயற்சியை மேற்கொள்ளப்படுகின்றது.

“ஆபத்தான மரங்கள் என அடையாளம் காணப்பட்ட மரங்களைத் தவிர, கொழும்பு நகரில் உள்ள ஏனைய மரங்களும் முறிந்து விழும் அபாயத்தில் உள்ளன. கொழும்பு கறுவாத்தோட்டம், கிரிகோரி வீதிக்கு அருகாமையில் உள்ள பெரும் மரம் ஒன்று குறுக்கே விழுந்ததால், கொழும்பில் மரங்கள் விழுவது தொடர்பில் மீண்டும் பேசப்பட்டது. இதற்கு முன்னரும் கொழும்பில் பல வீதிகளுக்கு குறுக்கே பல மரங்கள் வீழ்ந்துள்ளன” என ஆணையாளர் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

# கைபேசியை தர மறுத்தவரை கொன்ற இளைஞர்கள் கைது

கொழும்பு, டிசெ. 18

கைபேசியை கேட்டபோது கொடுக்க மறுத்ததால் ஏற்பட்ட வாக்குவாதம் கத்திக்குத்தில் முடிந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

கிராண்ட்பாஸ் - புதிய களனி பாலத்தை அண்மித்த பகுதியில் நேற்றுமுன்தினம் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. சேதவத்தையை சேர்ந்த 33 வயது நபரே உயிரிழந்தவர் என்று அடையாளம் காணப்பட்டார்.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் கொழும்பு 14 மற்றும் வெல்லம்பிட்டி பகுதிகளை சேர்ந்த 18 வயது இளைஞர்களை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்தனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் இருவரும் உயிரிழந்தவரின் கைபேசியை கேட்டனர் என்றும் அவர் தர மறுத்ததால் தர்க்கம் வலுத்தபோது அவரை கத்தியால் குத்தினர் என்றும் இதில் அவர் உயிரிழந்தார் என்றும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 23 இலட்சம் வாகனங்களை தடை செய்வதற்கு தீர்மானம்!

கொழும்பு, டிசெ. 18

தற்போது பதிவு செய்யப்பட்டு பல வருடங்களாக பயன்படுத்தப்படாத சுமார் இருபத்து மூன்று இலட்சம் வாகனங்களை தடை செய்ய மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக வருவாய் உரிமம் புதுப்பிக்கப்படாத அல்லது மாற்றப்படாத வாகனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், துறைமுகம் மற்றும் விமான நிலையம் மற்றும் பந்தய போட்டிகளுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் சிறீ லங்கன் எயார்லைன்ஸ் மூலம் ஆயிரக்கணக்கான வாகனங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த தெரிவித்தார்.

தற்போது 83 லட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், ஆண்டுக்கு 55 இலட்சம் வாகனங்கள் மட்டுமே புதுப்பிக்கப்படுகின்றன. வாகன வருவாய் உரிமங்களை புதுப்பிப்பதற்கு தேவையான புகை சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதன் மூலம் இது உறுதிப்படுத்தப்படும் என ஆணையாளர் நாயகம் கூறினார்.

அதுமட்டுமின்றி, வருவாய்த்துறை உரிமம் புதுப்பிக்க புகை சான்றிதழ் தேவையில்லை எனும் போது, ஹைபிரிட், எலக்ட்ரிக், லேண்ட் வாகனங்கள், 1975 இற்கு முன் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் பயன்பாட்டில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதன்படி, சுமார் 61 இலட்சம் வாகனங்கள் பாவனையில் உள்ளன என்று மதிப்பிட முடியும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

21 இலட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் காணாமல் போயுள்ளதாகவும், மாகாண சபைகளுக்கு உட்பட்ட மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களங்களுக்கு வருமான அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்து வாகனங்கள் பற்றிய தகவல்களை வழங்குமாறு எத்தனை அறிவித்தல்களை வழங்கியும் எந்த மாகாண சபையும் தகவல் வழங்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபைகளிடம் தகவல்களை கோரும் போது, தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையத்திடம் பெற்றுக்கொள்ளுமாறு கூறுவதாகவும், தகவல் தொழிநுட்ப முகவர் நிலையத்திடம் கேட்டால், தகவல்களை சேகரிக்கும் முறைமை இதுவரை தயார் செய்யவில்லை எனவும் மோட்டார் போக்குவரத்து திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

23 இலட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் தொடர்பான குறிப்பிட்ட தகவல்கள் இல்லாததாலும், குற்றச் செயல்களுக்கு மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்கள் பயன்படுத்தப்படுவதாலும், மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக வருவாய் உரிமம் புதுப்பிக்கப்படாத அனைத்து வாகனங்களும் பதிவு நீக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 2024 ஏப்ரல் 30 வரை முட்டை இறக்குமதி!

கொழும்பு, டிசெ. 18

2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை முட்டை இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அரச வணிகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சந்தையில் முட்டையின் விலை சடுதியாக உயர்வடைந்ததன் காரணமாக உணவு கொள்கைக்கான குழு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய, தொடர்ச்சியாக முட்டையை இறக்குமதி செய்து உள்நாட்டு சந்தைக்கு விநியோகிக்கவுள்ளதாக அரச வணிகக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை, சதொச, வெதுப்பகங்கள், ஹோட்டல்களுக்கு 10 மில்லியன் முட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார். (ஐ)

# மக்கள் ஆணைபெற்ற அரசு அமைய பாராளுமன்றத்தை உடன் கலையுங்கள்

## எதிர்க்கட்சி வலியுறுத்து



கொழும்பு, டிசெ. 18

2024ஆம் ஆண்டு பொருளாதார ரீதியில் நாட்டுக்கு படுபயங்கரமான ஆண்டாக அமையப்போகின்றது. எனவே, மக்கள் ஆணைபெற்ற அரசு ஆட்சிப்பீடமேற உடனடியாக பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2023ஆம் ஆண்டைவிடவும் 2024 ஆம் ஆண்டு படுபயங்கரமான ஆண்டாக அமையப்போகின்றது. பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைப்போகும் ஆண்டாக அமையப்போகின்றது. மூன்று வேளை உணவு உட்கொண்ட மக்கள் தற்போது இருவேளைகள்தான் உண்கின்றனர். இந்நிலைமையும் அடுத்த ஆண்டு இல்லாமல்போகக்கூடும்.

எனவே, அரசு உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். மக்கள் ஆணையுடன் ஆட்சியொன்றை ஏற்படுத்த சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீட்பார் எனக் கூறப்பட்டது. ஆனால் என்ன நடக்கின்றது? பொருட்களின் விலைகள் எல்லாம் எகிறிவிட்டன.

மக்களால் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கள்வர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். விலைமனு கோரல்களில் கொள்ளைகள் இடம்பெறுகின்றன. எனவே, இந்நாட்டை மேலும் நாசமாக்காமல் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகின்றோம்” என தெரிவித்தார். (ஐ)


# சுற்றாடல் பேரழிவை ஏற்படுத்தும் நிர்மாணங்களை உடன் அகற்றுக

## ஜனாதிபதி ரணில் பணிப்பு

கொழும்பு, டிசெ. 18

பதுளை மாவட்டத்தின் ஓஹிய நகரின் பொரலந்த தொடக்கம் ஹொர்தொன் தன்ன வரையான பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் அனுமதியற்ற நிர்மாணங்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

ஓஹிய பிரதேசத்தில் அனுமதியற்ற நிர்மாணங்களால் சுற்றாடல் பேரழிவு ஏற்பட்டுள்ளதை அவதானித்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



ஊவா மாகாண நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பதுளை மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## மேலும்...

இடையில் - 31ஆம் திகதிக்கு முன்னர் மேலும் இரண்டு காற்றுச் சுழற்சிகள் உருவாகும் வாய்ப்புகள் உள்ளன. இது தற்போதைய நிலையின் படியே இதில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆனால், ஆகக் குறைந்தது ஒரு காற்றுச் சுழற்சியாவது தோன்றும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நிலம் முழுவதும் நிரம்பிய நிலையில் உள்ளது. வடக்கு மாகாணத்தின் அனைத்து மேற்பரப்பு நீர்நிலைகளும் நிரம்பியுள்ளன. சகல குளங்களினதும் நீரேந்து பிரதேசங்களிலும் நிலம் நிரம்பியுள்ள நிலையில் 10 மி.மீ. மழை கிடைத்தாலும் அந்த நீர் அந்தக் குளங்களுக்கே வரும். எனவே குளங்களால் வெளியேற்றப்படும் மேலதிக உபரி நீரும் மழை நீரும் சேர்ந்து முல்லைத் தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களின் சில பகுதி களில் வெள்ள நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. அடுத்த சில நாட்களுக்கு தொடர்ந்தும் மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதனால் இந்த வெள்ள அனர்த்த பிரதேசங்களின் அளவு அதிகரிக்க கூடும்.

எனவே வெள்ள அனர்த்தம் ஏற்படக் கூடிய பகுதிகளில் (தாழ்நிலப் பகுதிகள், ஆற்றங்கரையோரங்களை அண்மித்த பகுதிகள், குளங்களின் நீரேந்து பிரதேசங்கள், குளங்களின் வான் பாயும் நீர் வெளியேறும் பகுதிகளுக்கு அண்மித்த பகுதிகள், வெள்ள வடிகால்களுக்கு அண்மித்த பகுதிகள்) உள்ள மக்கள் வெள்ள நிலைமைகளை எதிர்கொள்ளக் கூடிய வகையில் தயாராக இருப்பது அவசியம்.

தயாராக இருந்து வெள்ளம் வராவிட்டால் எமக்கு எந்த பாதிப்பும் இல்லை. ஆனால் நாம் அசட்டையாக இருந்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை எதிர்கொள்வதற்கு சிரமப்படுவோம். எனவே விழிப்பாக இருப்பது சிறந்தது - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கிளிநொச்சி...

பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரணைமடு குளத்தின் தாழ் நிலப் பகுதிகளில் அமைந்துள்ள கிராமங்களான கண்டாவளை, தர்மபுரம், பிரமந்தனாறு, முரசுமோட்டை, புன்னை நீராவி, பெரியகுளம், குமரபுரம், ஊரியான், உமையள்புரம், பரந்தன், புளியம் பொக்கணை பகுதிகளில் வெள்ளநீர் வீடுகளுக்குள் புகுந்து மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நான்கு நலன்புரி நிலையங்களில் நாகேந்திரபுரம் மகாவித்தியாலயம், முரசுமோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, கண்டாவளை மகாவித்தியாலயம் ஆகிய இடங்களை நேற்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் நேரில் சென்று பார்வை யிட்டார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண பொருட்கள் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிலையில், கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இடங்களில் ஆயிரத்து 364 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 305 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## அரசியலில்...

காட்ட முடியும். பெரும்பான்மையான மக்கள் தமது கட்சியுடன் திரண்டுள்ளனர். சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் மக்கள் எமது கட்சியை விட்டு நகரவில்லை என்பதை கட்சி மாநாடு நிரூபித்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தகுதி தனக்கு இல்லை என்றும், கட்சியை சேர்ந்த யாராக இருந்தாலும் வெற்றிபெற ராஜபக்ஷக்கள் பாடுபடுவார்கள். சிறீ லங்கா பொதுஜன பெரமுன ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைவது தொடர்பில் எனக்கு தெரியாது - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## முல்லையில்...

பகுதிகளில் இருக்கின்ற மக்கள் பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

வெள்ள நீர் வழிந்து ஓட முடியாத நிலையில் பல்வேறுபட்ட குடியிருப்புகளுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இரண்டு இடைத்தங்கல் முகாம்களில் 68 குடும்பங்களை சேர்ந்த 222 அங்கத்தவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அதிகளவான வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளதால் 15 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் குடியிருக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## சரிகமப...

போட்டியின் மூன்றாவது பருவத்தில் 28 போட்டியாளர்கள் பங்கேற்றிருந்தனர். இதில் இலங்கையின் யாழ்ப்பாணத்தை சேர்ந்த உதயசீலன் கில்மிஷா, மலையகத்தை சேர்ந்த கனகராஜ் அசானி ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்த இசை போட்டி நிகழ்ச்சியின் இறுதி நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக் கிழமை சென்னை நேரு உள்ளக விளையாட்டரங்கில் நடந்தது. இதில், கில்மிஷா உட்பட ஆறு பேர் பங்கேற்ற னர். இதேநேரம், இந்தப் பட்டியலில் மலையகத்தை சேர்ந்தவரான அசானி யின் பெயர் இடம்பெறவில்லை.

நேற்று நடந்த இறுதிப் போட்டியில் உதயசீலன் கில்மிஷா வெற்றி பெற்று பட்டத்தை கைப்பற்றினார். அவருக்கான விருதை பிரபல இசையமைப்பா ளரும் பாடகருமான யுவன்சங்கர் ராஜா வழங்கினார். அவருக்கு, 10 இலட்சம் இந்திய ரூபாய் பரிசாக அளிக்கப்பட்டது. (ஐ)

## சஜித்...

இணைந்து, பரந்துபட்ட கூட்டணியை அமைக்கவுள்ளோம். மிகவும் ஆபத்தான பொருளாதார கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு எதிராக, மக்களை பாதுகாப்பதே எமது எதிர்பார்ப்பாகும் - என்று கூறினார்.

இதேபோன்று, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் பேரவையின் அனைத்து உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணையவுள்ளனர். இதன் மூலம் ஒரு பரந்த அரசியல் கூட்டணியை அமைக்க முடியும் - என்று நாலக கொடஹேவா எம். பி. கூறியுள்ளார். (ஐ)

## பாடசாலைகளில்...

இதையடுத்து, விடுமுறை வழங்கப்பட்டு, முதலாம் தவணையின் 2 ஆம் கட்ட கல்வி நடவடிக்கை ஏப்ரல் 24 ஆரம்பமாகி மே 5 ஆம் திகதி வரை நடைபெறும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பின்னர், விடுமுறை வழங்கப்பட்டு, முதலாம் தவணையின் 3 ஆம் கட்ட கல்வி நடவடிக்கைகளுக்காக ஜூன் மாதம் 10 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி வரை கல்வி நடவடிக்கைகள் நடைபெறவுள்ளன.

இதையடுத்து, முதலாம் தவணை விடுமுறை வழங்கப்பட்டு, 2 ஆம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஜூலை முதலாம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இந்த 2 ஆம் தவணை கல்வி நடவடிக்கைகள் செப்ரெம்பர் 13 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

பின்னர், 3 ஆம் தவணை கல்வி நடவடிக்கைகள் 2 கட்டங்களாக நடத்தப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, 3 ஆம் தவணையின் முதலாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் செப்ரெம்பர் 23 ஆம் திகதி முதல் நவம்பர் 22 ஆம் திகதி வரையும், 2 ஆம் கட்ட கல்வி நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

# “குற்றவாளிகளே நாட்டில் ஆட்சியில் இருக்கிறார்கள்”

கொழும்பு, டிசெ. 18

எம்மை கஷ்டத்தில் தள்ளிய ஆட்சியாளர்கள் தற்போது புதிதாக முகமூடி அணிந்து கொண்டு மீண்டும் வருவதற்கு முயற்சிக்கின்றனர். காட்டுச்சட்டமே நாட்டில் உள்ளது. குற்றவாளிகளே ஆட்சியில் உள்ளனர். இவ்வாறான ஆட்சியாளர்களின் கீழ் இருப்பதை நினைத்து நாட்டு மக்கள் வெட்கப்பட வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் மாநாடு தொடர்பில் கருத்து தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

எம்மை கஷ்டத்தில் தள்ளிய ஆட்சியாளர்கள் தற்போது என்ன செய்கிறார்கள். புதிதாக முகமூடி அணிந்து கொண்டு மீண்டும் வருவதற்கு முயற்சிக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்கவின் மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இரண்டு தரப்பினரும் முன்னர் ஒருவருக்கு ஒருவர் போரிடும் எதிரிகளாக தெரிந்தார்கள். தற்போது அவர்கள் இருவரும் ஒரே அரசாங்கத்தில் இருக்கிறார்கள்.

நீதிமன்றத்தில் அபராதம் விதித்துள்ளனர். மகிந்த, கோட்டாபய, பஸில், அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட பலர் குற்றவாளிகள். அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூட குற்றவாளி. காட்டுச் சட்டமே நாட்டில் உள்ளது. குற்றவாளிகளே ஆட்சியில் உள்ளனர். - என்றார். (ஐ)

## அரைகுறை...

உரிமையை அங்கீகரிப்பதன் அடிப்படையில் நீண்டகால அரசியல் தீர்வை காண உதவ வேண்டும் என்றும் அந்த அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஒவ்வொரு தனிநபரும் சமாதானமாகவும், கௌரவத்துடனும், நம்பிக்கையுடனும், எவ்வித பயமும் சந்தேகப்படுதலுமின்றி சமமான உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய ஒரு இலங்கை உருவாக்கப்பட வேண்டும் என்ற தொனிப்பொருளை மையப்படுத்திய ‘இமயமலை’ பிரகடனம் உலகத் தமிழர் பேரவையின் ஊடகப் பேச்சாளர் சுரேன் சுரேந்திரனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டது.

இது குறித்து தேசிய கனேடிய தமிழர் பேரவை, ஜேர்மனி ஈழத் தமிழர் பேரவை, பின்லாந்து தமிழர் பேரவை, சுவீடன் தமிழர் தேசிய பேரவை, ஈழத் தமிழர் பேரவை - பிரிட்டன், இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் இயக்கம் என்பன உள்ளடங்கலாக உலகளாவிய ரீதியில் கனடா, நோர்வே, இத்தாலி, ஜேர்மனி, நியூஸிலாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம், பின்லாந்து, சுவீடன், அவுஸ்திரேலியா, டென்மார்க், பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, பிரிட்டன், மொரிஷியஸ், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் 16 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

2009ஆம் ஆண்டு தமிழினப் படுகொலையின் உச்சகட்டத்தில், புலம்பெயர்ந்த தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமிழ் குடை அமைப்பை உருவாக்கவேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

அதன்படி, ஆரம்பத்தில் உலகளாவிய தமிழ் அமைப்புகள் தமிழர்களின் நியாயமான மற்றும் அடிப்படை அபிலாசைகளை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு உலகத் தமிழர் பேரவையை உருவாக்கின.

சில ஆண்டுகளுக்குள் அப்பேரவை ஒரு சில நபர்களால் ஜனநாயகமற்ற முறையில் கையகப்படுத்தப்பட்டதன் விளைவாக, அது அதன் நோக்கத்திலிருந்து விலகியது. அதனால் கனேடிய தமிழ் காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய அனைத்து அங்கத்துவ அமைப்புகளும் உலகத் தமிழர் பேரவையிலிருந்து தாமாகவே விலகிக்கொண்டன.

இன்று வரை உலகத் தமிழர் பேரவை மற்றும் கனேடிய தமிழ் காங்கிரஸ் ஆகிய இரண்டும் ஏற்கனவே இடம் பெற்ற இனப்படுகொலைக்காகவோ அல்லது தமிழர்களின் நியாயமான அடிப்படை கோரிக்கைகளுக்காகவோ வாதிட மறுத்துவிட்டதன் மூலம் தாம் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் தமிழ் மக்களை அவர்கள் கைவிட்டிருக்கின்றனர்.

இந்நிலையில் உலகத் தமிழர் பேரவையிலிருந்து வெளியேறிய 14 நாடுகளை சேர்ந்த புலம்பெயர் தமிழ் அமைப்புக்களில் பெரும்பாலானவை இணைந்து அனைத்துலக ஈழத் தமிழர் அவையை உருவாக்கின. இதில் 2008 முதலாவது மக்களவை ஆரம்பிக்கப்பட்டு இன்று 14 நாடுகளில் மக்களவைகள் இயங்குகின்றன. இவை தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக தொடர்ந்து வாதிட்டு வருகின்றன.

இதற்கிடையில், தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும் வரலாற்று தாயகத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலைமை மோசமாகி, அவர்களின் தாயகத்தில் அடிப்படை உரிமைகள் அற்ற திறந்தவெளி சிறைச்சாலையாக மாறியுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையினால் இரத்து செய்யுமாறு பணிக்கப்பட்ட கொடூரமான பயங்கரவாத தடை சட்டம், சுதந்திர போராட்டத்தில் உயிரிழந்த தங்கள் பிள்ளைகள் மற்றும் உறவினர்களை நினைவுகூரும் தமிழ் மக்களை துன்புறுத்துவதற்கும் சிறையில் அடைப்பதற்கும் இலங்கை அரசால் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் உலகத் தமிழர் பேரவை மற்றும் அதன் சதிகாரர்களின் துரோக முயற்சியானது, ஏமாற்றுக்காரர்களுடன் பேரம் பேசும் போலிக்காரணத்தின் கீழ் இலங்கையை சர்வதேச சமூகத்திலிருந்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்தும் பாதுகாப்பதையே நோக்காகக் கொண்டிருக்கின்றது.

இந்த ஏமாற்று முயற்சிகளை புறக்கணிக்குமாறு சர்வதேச சமூகத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அரைகுறையான தீர்வு தமிழ் தேசத்தின் பாதுகாப்பை மேலும் சீரழிக்கும். தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு சர்வதேச சமூகம் பரிகார நீதியை வழங்க வேண்டும். அத்துடன், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் அடிப்படையில் நீண்டகால அரசியல் தீர்வைக் காண உதவ வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## போதைப்...

செய்யப்பட்டனர். கைதான மூவரும் 20, 21,23 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்களிடம் ஹெரோயின் மற்றும் மாவா போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. கைதான மூவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ-03)

## கூட்டணியை...

தீர்மானிக்கவில்லை. தேர்தல்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. எனவே எதிர்கால அரசியல் தீர்மானங்களை எடுப்பதற்கு இன்னும் கால அவகாசம் இருக்கிறது” - என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கல்லீரல் வீக்கம் நோய் சிறுவரிடையே உயர்வு

## மருத்துவர் தீபால் பெரேரா எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 18

தொடர் மழையால் சிறுவர்களுக்கு கல்லீரல் வீக்கம் (ஹெபடைடிஸ்) பாதிப்பு அதிகரித்துள்ளதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இருமல், சளி, காய்ச்சல் போன்றவற்றுடன் கல்லீரல் வீக்கம் நோய் குழந்தைகளையும் பாதிக்கிறது என அவர் சுட்டிக்காட்டுகிறார்.

முறையான மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக் கொள்வதன் மூலம் குழந்தைகளை இந்நிலைமையிலிருந்து பாதுகாக்க முடியும். இருமல் மற்றும் சளி போன்ற அறிகுறிகள் இருந்தால் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என்றும் மருத்துவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# களனி பல்கலைக்கழகத்தின் கற்கைகள் இன்று ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 18

களனி பல்கலைக்கழகத்தில் மூடப்பட்டுள்ள ஏனைய பீடங்களின் கற்கைகள் இன்று திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்படும் என உபவேந்தர் மூத்த பேராசிரியர் நிலாந்தி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, மனிதவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடங்களின் கற்கைகள் இவ்வாறு மீள திறக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரை தாக்கிய சம்பவத்தினால் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக களனி பல்கலைக்கழகம் கடந்த 5ஆம் திகதி கல்வி நடவடிக்கைகளுக்காக தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 68 கிலோ கஞ்சா பொதிகள் கிளிநொச்சியில் கைப்பற்றல்



கிளிநொச்சி, டிசெ. 18

பாரதிபுரத்தில் வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட சுமார் 68 கிலோவுக்கு மேற்பட்ட 30 கஞ்சா பொதிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் மோப்ப நாய் சகிதம் தேடுதலை மேற்கொண்ட போது இந்த கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டன.

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சோதனை நடத்தப்பட்டது. இதன் போது, வீட்டின் உள்கூரைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

விசேட போதை பொருள் ஒழிப்பு குழு குறித்த சுற்றிவளைப்பை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாட்டின் பிறப்பு எண்ணிக்கை 10 வருடங்களில் 25 வீதம் வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 18

கடந்த 10 வருடங்களில் நாட்டில் பிறப்புவீதம் சுமார் 25 வீதத்தால் குறைந்துள்ளதாக சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள பிறப்பு பதிவேட்டின் மூலம் தெரியவருகிறது.

இதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதி வரை நாட்டில் பிறந்தவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 65 ஆயிரத்து 762 ஆகவும், 2022இல் பிறந்தவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 75 ஆயிரத்து 321 ஆகவும் உள்ளது.

2014இல் 3 இலட்சத்து 49 ஆயிரத்து 744 பிறப்புகள், 2015இல் 3 இலட்சத்து 36 ஆயிரத்து 97, 2016இல் 3 இலட்சத்து 29 ஆயிரத்து 630, 2027இல் 3 இலட்சத்து 26 ஆயிரத்து 52, 2018இல் 3 இலட்சத்து 28 ஆயிரத்து 112 மற்றும் 2019இல் 3 இலட்சத்து 19 ஆயிரத்து 10 மற்றும் 2020இல் 2 இலட்சத்து 84 ஆயிரத்து 284 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# வருடத்தில் 80 வீதமான மரணங்கள் தொற்றா நோய்களால் நிகழ்கின்றன

கொழும்பு, டிசெ. 18

நாட்டில் வருடாந்தம் நிகழும் மரணங்களில் 80வீதமானவை தொற்றா நோய்கள் மற்றும் அது தொடர்பான சிக்கல்களால் ஏற்படுகின்றன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் சனத்தொகையில் 35 வயதுக்கு உட்பட்டவர்களில் 15 வீதம் பேர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 35 வீதம் பேர் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உடற்பயிற்சியின்மையே இந்த நிலைமைக்கு முக்கிய காரணம் என ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபாலவினால் சுகாதார அமைச்சின் வளாகத்தில் நிறுவப்பட்ட உடல் ஆரோக்கிய பிரிவு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

எதிர்காலத்தில் அரசு மருத்துவமனைகளிலும் இதுபோன்ற உடல் நலப் பிரிவுகளை நிறுவுவதற்கான திட்டங்கள் நடைபெற்று வருகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# ஆளும் கட்சியின் 25 எம். பிக்கள் எதிர்க்கட்சியில் ஐக்கியமாவர்!

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, டிசெ. 18

ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணையவுள்ளனர் என்று பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு இந்தக் குழுவினர் பாராளுமன்றத்துக்கு தெரிவானதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த குழுவுடன் கூட்டு எதிர்க்கட்சியாகவும் எதிர்காலத்தில் அரசியல் கூட்டமைப்பாகவும் இணைந்து செயல்படுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலுக்கான புதிய கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை நியமிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# தொடர்ந்து பெய்யும் மழையால் மட்டக்களப்பில் 4,254 பேர் பாதிப்பு!

மட்டக்களப்பு, டிசெ. 18

தொடர் மழையால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 6 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆயிரத்து 334 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்டது 254 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 10 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளுது.

இந்த தொடர்மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலக பிரிவில் 941 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 46 பேரும், போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 142 பேரும், கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகப் பிரிவில் 319 குடும்பங்களைச் சேர்ந்த 932 பேரும், மண்முனை பற்று பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 3 பேரும், காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள காத்தான்குடி 2ஆம் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும், ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 130 பேரும் பாதிப்படைந்துள்ளனர்.



அத்துடன், வாகரையில் 2 வீடுகளும் காத்தான்குடியில் ஒரு வீடும், ஏறாவூர் பற்றில் 7 வீடுகளுமாக 10 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அந்த புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# பாதுகாப்பு செயலராக ஜெகத் ஜெயசூரிய?

கொழும்பு, டிசெ. 18

பாதுகாப்பு செயலர் கமல் குணரத்னவுக்குப் பதிலாக புதிய பாதுகாப்பு செயலர் நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

முன்னாள் இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரியவை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அவருக்கான நியமனம் ஜனவரி மாதம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெப். ஜெனரல் ஜகத் ஜெயசூரிய 2009 - 2013ஆம் ஆண்டு வரை இலங்கையின் 20ஆவது இராணுவத் தளபதியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்குது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# இஸ்ரேலிய பணயக் கைதிகளையே தவறுதலாக கொன்ற இஸ்ரேல் ராணுவம்!

## கொந்தளிக்கும் மக்கள்







இஸ்ரேலிய ராணுவம் காஸாவில் தனது தாக்குதல் நடவடிக்கையின் போது தவறுதலாக மூன்று பணயக் கைதிகளை "அச்சுறுத்தல்" எனக் கருதி கொன்றுவிட்டதாகக் கூறுகிறது.

உயிரிழந்தவர்களில் 28 வயதான யோதம் கைம், 22 வயதான சமர் தலால்கா மற்றும் 26 வயதான அலோன் ஷம்ரிஸ் ஆகியோர் அடங்குவர். ராணுவம் வருத்தம் தெரிவித்ததுடன், காஸாவின் வடக்கே ஷேஜாயாவில் மூவரும் இறந்ததாக அறிவித்தது.

அக்டோபர் 7ஆம் தேதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திய ஹமாஸ் ஆயுதக் குழு, 200க்கும் மேற்பட்டோரை பணயக் கைதிகளாகப் பிடித்து மீண்டும் காஸாவுக்கு கொண்டு சென்றது.

கடந்த சில நாட்களில் ஹமாஸ் பல டஜன் பணயக் கைதிகளை விடுவித்தாலும், அந்தக் குழுவிடம் இன்னும் 100க்கும் மேற்பட்ட பணயக் கைதிகள் சிக்கியுள்ளனர்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமையன்று இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் சொந்த நாட்டவர்களே உயிரிழந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்துள்ள ராணுவம், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளது.

"காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்து, பணயக் கைதிகள் அனைவரையும் வீட்டிற்கு அழைத்து வருவதே எங்கள் தேசியப் பணி" என்றும் ராணுவம் கூறியுள்ளது.

### தெருவில் இறங்கிய மக்கள்

இந்த கொலைச் சம்பவம் குறித்த தகவல் கிடைத்ததும், இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு, அந்நகரில் உள்ள ராணுவ தளத்தை நோக்கிப் பேரணியாகச் சென்றனர்.

எஞ்சியுள்ள பணயக் கைதிகளை விடுவிக்க ஹமாஸ் ஆயுதக் குழுவுடன் அரசு சமரசம் செய்துகொள்ள வேண்டும் என போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கைகளில் மெழுகுவர்த்தி மற்றும் சுவரொட்டிகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுவரொட்டிகளில் "அவர்களை வீட்டிற்கு அழைத்து வாருங்கள்" மற்றும் "இப்போது பணயக் கைதிகள் பரிமாற்ற நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளுங்கள்," என்று எழுதப்பட்டுள்ளது.

இறந்தவர்களின் உடல்கள் இஸ்ரேலை அடைந்துள்ளன. அங்கு உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

### உடல்களை அடையாளம் காணும் பணிகள்

தற்போது உயிரிழந்த யோதம் கயீம் என்பவரை அக்டோபர் 7ஆம் தேதி, கிப்புட்ஸ் கஃப்ர் அஸாவில் இருந்து ஹமாஸ் குழுவினர் கடத்திச் சென்றனர். யோதம் ஒரு இசைக்கலைஞர் என்பதுடன், அவர் விலங்குகளை நேசிப்பவராகவும் இருந்தார். அவருக்கு இத்தாலிய உணவுதான் மிகவும் பிடித்த உணவு என்றும் தெரியவந்துள்ளது.

ஹமாஸ் இஸ்ரேலை தாக்கிய நாளில், யோதம் கயீம் தனது குடும்பத்தினரை அழைத்து, தங்களது வீடு தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்ததாகக் கூறினார். இதற்கிடையில், யோதம் கயீம் காற்றோட்டமாக இருப்பதற்காகத் தனது வீட்டின் ஜன்னலை திறந்தபோது, ஹமாஸ் குழுவினர் அவரைக் கடத்திச் சென்றனர்.

மகன் இறப்பதற்கு முன் செய்தியாளர்களிடம் பேசிய அவரது தாயார், தாக்குதல் நடந்த அன்று அவர் வீட்டில் பதுங்கியிருந்தபோது அவருடன் பேசியதாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் இறந்த இரண்டாவது நபர், 26 வயதான அலோன் ஷம்ரிஸ், அக்டோபர் 7ஆம் தேதி காஃப்ர் அஸபவில் இருந்தார்.

இதுதவிர, 22 வயதான சமீர் தலால்கா, கிப்புட்ஸ் நிர் அம் என்ற இடத்தில் இருந்து ஹமாஸால் கடத்தப்பட்டார். மோட்டார் சைக்கிள் ஆர்வலரான சமீர், கிராமப் புறங்களுக்குச் செல்வதையும் தனது நண்பர்களுடன் நேரத்தைச் செலவிடுவதையும் அதிகம் விரும்புவராக இருந்திருக்கிறார்.




அவர் ஹூரா நகரில் வசித்து வந்த நிலையில் கிப்புட் ஸில் ஒரு கோழிப் பண்ணையில் வேலை செய்து வந்தார். இவர் அக்டோபர் 7ஆம் தேதி காலையில் வழக்கம் போல் வேலைக்குச் சென்றிருக்கிறார்.

ஹமாஸ் தாக்குதலுக்குப் பிறகு, சமீர் தலால்கா தனது சகோதரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனக்கு துப்பாக்கி தோட்டாவால் காயம் ஏற்பட்டதாகத் தெரிவித்திருந்தார்.

தாக்குதல் நடந்த அன்று காலை உள்ளூர் நேரப்படி 7 மணியளவில் தனது மகனுடனான தொடர்பை இழந்ததாக அவரது தந்தை உள்ளூர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். சமீர் தலால்கா காஸாவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட படம் டெலிகிராமில் பகிரப்பட்டது.



### இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு என்ன சொன்னார்?

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்த மரணங்களை 'தாங்க முடியாத சோகம்' என்று வர்ணித்துள்ளார்.

"இந்தக் கடினமான வேளையில்கூட, நமது காயங்களைக் குணப்படுத்துவோம், பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

மேலும் எங்கள் நாட்டுப் பணயக் கைதிகள் அனைவரையும் பாதுகாப்பாக நாட்டிற்கு அழைத்து வருவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வோம்," என்று அவர் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவத்திற்கு அமெரிக்க தரப்பிலும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி, இஸ்ரேலிய ராணுவத்தின் இந்தக் கொலைகள் ஒரு பெரிய தவறு என்றும், இந்த நடவடிக்கை எப்படி நடந்தது என்பது குறித்த முழுமையான தகவல்கள் அமெரிக்காவிடம் இல்லை என்றும் கூறினார்.

சமீபத்தில், காஸாவில் நடந்து வரும் தாக்குதல்கள் தொடர்பாக இஸ்ரேல் மீது அமெரிக்கா மிகக் கண்டிப்புடன் இருந்தது. காஸாவில் நடந்து வரும் கண்மூடித்தனமான குண்டுவெடிப்பால் இஸ்ரேல் உலகளாவிய ஆத ரவை இழந்து வருவதாக டிசம்பர் 13ஆம் தேதியே அமெ ரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியிருந்தார்.

2024ஆம் ஆண்டிற்கான நிதி திரட்டுவது தொடர்பான நிகழ்வில் பைடன் பேசுகையில், "இஸ்ரேலின் பாதுகாப்பு அமெரிக்காவை சார்ந்து இருக்கலாம், ஆனால் தற்போது அது அமெரிக்காவைவிட ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பா மற்றும் உலகின் பெரும்பா லான நாடுகளைச் சார்ந்துள்ளது. ஆனால் தொடர்ந்து நடத்தப்படும் தாக்குதல்களின் காரணமாக இஸ்ரேல் அந்த ஆதரவை இழக்கும் நிலை உள்ளது," என்றார்.

இஸ்ரேலின் ராணுவத் தாக்குதல் தொடர்பாக பைடனுக்கு அமெரிக்காவில் பெரும் அழுத்தத்தை எதிர்கொள்ளும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. பைடனின் ஜனநாயகக் கட்சிக்குள் இருந்தும் இந்த அழுத்தம் வெளிப்படுகிறது.

பைடனின் அறிக்கை அமெரிக்க நிர்வாகத்தின் அறிக்கைகளைப் போன்றது. இதில் இஸ்ரேல் போரின்போது மனித உயிர்களைக் காப்பாற்றுவது பற்றியும் பேசப்பட்டிருந்தது. மூத்த அமெரிக்க அதிகாரிகளும் இஸ்ரேலின் ராணுவ நிலைப்பாடு குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதற்கு ஒரு நாள் முன்னதாக, காஸாவில் போர் நிறுத்தம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையிலும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் 153 நாடுகள் போர் நிறுத்தத்திற்கு ஆதரவாகவும், 10 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. இது தவிர, 23 நாடுகள் வாக்களிக்காமல் இருந்தன.

### ராணுவ நடமுறைகள் குறித்து எழும் கேள்விகள்

காஸாவில் ஹமாஸ் குழுவினர் நிர்வகிக்கும் சுகாதார அமைச்சகம் அளிக்கும் தகவல்களின் அடிப்படையில், இஸ்ரேலிய தாக்குதல்களில் இதுவரை 18,800 பேர் உயிரிழந்துள்ளனர்.

அக்டோபர் 7 அன்று, இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 1200 பேர் கொல்லப்பட்டனர் என்பதுடன் ஹமாஸ் 240 பேரை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றது.

ஹமாஸின் ஆக்கிரமிப்பில் இருந்து பணயக் கைதிகளை விடுவிக்க பயன்படுத்தப்படும் ராணுவ நடவடிக்கைகள் குறித்தும் மக்கள் கேள்விகளை எழுப்புகின்றனர். ஹமாஸால் சமீபத்தில் விடுவிக்கப்பட்டவர்களில் ஹான் அவிக்டோரியும் ஒருவர்.

"பணயக் கைதிகளை ராணுவத்தின் மூலம் மீட்க முடியும் என்று மக்கள் கூறுவதை நாங்கள் அடிக்கடி கேட்கிறோம். ஆனால் அவர்களை பாதுகாப்பாக திரும்ப கொண்டு வர எந்த ராணுவ நடைமுறையும் பின்பற்றப்படவில்லை," என்று அவர் கூறினார்.

அவர் தனது எக்ஸ் சமூக ஊடக பக்கத்தில் எழுதிய போது, இஸ்ரேல் தனது மக்கள் பாதுகாப்பாக திரும்புவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். ●

# அமெரிக்க சீக்கிய தலைவர் கொலை சதி: இந்தியா - அமெரிக்கா உறவில் சிக்கல் வருமா? அமெரிக்க எம்.பி.க்கள் எச்சரிக்கை!




சீக்கிய பிரிவினைவாத தலைவர் குர்பத்வந்த் சிங் பன்னூனைக் கொலை செய்ய சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட நிகில் குப்தா பற்றி அமெரிக்க அரசாங்கம் ஐந்து இந்திய-அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தகவல் அளித்துள்ளது.

இந்த சதித் திட்டத்தின் ஒரு பகுதியாக கொலை செய்யப்படவிருந்த பிரிவினைவாத தலைவர் பற்றிய தகவலை அமெரிக்க அரசு தரப்பு தெரிவிக்கவில்லை. ஆனால் இந்திய மற்றும் சர்வதேச ஊடக அறிக்கைகளின்படி, வழக்கறிஞர் மற்றும் சீக்கிய பிரிவினைவாத தலைவரான குர்பத்வந்த் சிங் பன்னுவைக் கொலை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

பன்னூனைக் கொலை செய்ய பணம் கொடுத்ததாக நிகில் குப்தா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவளி அமெரிக்க எம்.பி.க்கள் அமி பெரா, பிரமிளா ஜெய்பால், ரோ கண்ணா, ராஜா கிருஷ்ணமூர்த்தி மற்றும் சிறி தானேதர் ஆகியோர் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். நிகில் குப்தா மீதான குற்றச்சாட்டு குறித்து பைடன் நிர்வாகம் நடத்திய ரகசிய விசாரணைக்குப் பிறகு எம்.பி.க்கள் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அதில், “நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில், நமது குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு நாங்கள் மிகப்பெரிய முன்னுரிமை அளிக்கிறோம். நிகில் குப்தா மீதான அமெரிக்க அரசின் குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையில் கவலையளிக்கின்றன” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், “பன்னூன் கொலைச் சதி குறித்து விசாரிக்க குழு அமைக்க இந்திய அரசு அறிவித்துள்ளதை வரவேற்கிறோம். இதனுடன், இந்திய அரசு இந்த விஷயத்தை முழுமையாக ஆய்வு செய்வதும் முக்கியம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உட்பட அனைவரையும் பொறுப்பேற்க வைத்து, எதிர்காலத்தில் இது போன்ற தவறுகள் நடக்காது என்று இந்திய அரசு உத்தரவாதம் அளிக்கும் என நாங்கள் நம்புகிறோம்” என்று தெரிவித்துள்ளனர்.

ஐந்து எம்.பி.க்களின் அறிக்கையில், ‘இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான ஒத்துழைப்பு இரு நாட்டு மக்களின் வாழ்க்கையில் சாதகமான, நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால், குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் கவலையளிக்கும் வகையில் உள்ளன என்பதும், கவனிக்கப்படாவிட்டால், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முக்கியமான உறவுகளுக்கு கணிசமான பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதே எங்கள் கவலையாக இருக்கிறது,” என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து பைடன் நிர்வாகம் தங்களுக்கு வெளிப்படையாக பல தகவல்களை அளித்துள்ளதற்கு தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் இந்த எம்பிக்கள் தெரிவித்துள்ளனர்.

52 வயதான நிகில் குப்தா பணம் கொடுத்து கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், குப்தாவுக்கு பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

சீக்கிய பிரிவினைவாதி குர்பத்வந்த் சிங் பன்னூனைக் கொலை செய்ய ஒரு கொலையாளிக்கு சுமார் 80 லட்சம் ரூபாய் தருவதாக குப்தா உறுதியளித்ததாக அமெரிக்க அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர். பன்னூன் நியூயார்க் நகரில் வசித்து வருகிறார்.

அமெரிக்காவின் வேண்டுகோளின் பேரில் ஜூன் 30 அன்று செக். குடியரசு நாட்டில் குப்தா கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக விசாரணை நடத்த இந்திய அரசு ஏற்கனவே ஒரு குழுவை அமைத்துள்ளது.

இதற்கிடையில், காலிஸ்தான் சார்பு அமைப்பான “சீக் ஃபார் ஜஸ்டிஸ்’, இந்திய-அமெரிக்க எம்.பி.-க்களுக்கு பைடன் நிர்வாகம் வழங்கிய விளக்கத்துக்கு வரவேற்பு தெரிவித்துள்ளது.

“சீக் ஃபார் ஜஸ்டிஸ்’ அமைப்பின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான பன்னூன் இது குறித்துக் கூறுகையில், ‘அமெரிக்க எம்.பி.-க்கள் அமெரிக்க குடிமக்களின் உயிர்களையும், அமெரிக்காவிலும் அதற்கு அப்பாலும் அவர்களின் கருத்து சுதந்திரத்தையும் பாதுகாக்க தயாராக உள்ளனர் என்பதற்கு இது உறுதியளிக்கும் நடவடிக்கையாகும். உண்மையில் இதுவே அமெரிக்க ஜனநாயகத்தின் அடிப்படை,” என்றார்.

### உச்ச நீதிமன்றத்தில் நிகில் குப்தா மனு

இந்நிலையில், இந்திய உச்ச நீதிமன்றத்தில் நிகில் குப்தா ஒரு ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்.

அவர் மீதான குற்றச்சாட்டு குறித்த விவகாரத்தில் இந்திய அரசு தலையிட உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் கோரியுள்ளார்.

இந்த வழக்கில் வாதிட்டு வரும் வழக்கறிஞர் ரோகினி மூசா கூறுகையில், ஜனவரி 4-ம் தேதி விசாரிக்க உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்று தெரிவித்தார்.

நிகில் குப்தா, தான் சட்டவிரோத காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அவரை அமெரிக்காவுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.



தொடர்ந்து பேசிய ரோகினி மூசா, “அவருக்கு எதிராக நாடு கடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த உத்தரவு நகல் எங்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. அவர் நாடு கடத்தப்பட்டதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அவர்களிடமிருந்து எந்தத் தகவலையும் பெறவோ அல்லது அவர்களைப் பற்றி எதுவும் அறியவோ முடியாத நிலைதான் உள்ளது,” என்றார்.

நிகில் குப்தாவின் குடும்பத்தினரால் அவருக்கு எந்தவிதமான உதவியும் செய்ய முடியவில்லை என்றும் மூசா கூறுகிறார்.

குப்தாவின் குடும்பத்தினர், அவர் எந்தவிதமான கைது வாரண்டும் இன்றி “அமெரிக்காவின் பிரதிநிதிகள் என தங்களைத் தாங்களே அடையாளப்படுத்திக் கொண்ட அமெரிக்க ஏஜெண்டுகளால்” கைது செய்யப்பட்டதாகக் கூறுகின்றனர். அமெரிக்காவின் சார்பில் கைது செய்யப்பட்ட அவருக்கு இதுவரை நியாயமான சட்ட நடவடிக்கைகள் அல்லது உதவிகள் எதுவும் அளிக்கப்படாமல் இருப்பதாகவும் அவரது குடும்பத்தினர் கூறுகின்றனர்.

அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட நிலையில் அவர் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தனது மத நம்பிக்கைகளுக்கு முரணாக மாட்டிறைச்சி மற்றும் பன்றி இறைச்சியை உண்ணும்படி கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம், நியூயார்க் நகரில் ஒரு அமெரிக்க குடிமகனை கொலை செய்ய சதி செய்ததாக அமெரிக்க நீதிமன்றம் அவர் மீது குற்றம் சாட்டியது.

தான் அரசியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாகவும், யாரையும் அறியாத, யாருக்கும் தெரியாத அமெரிக்க குடிமகனைக் கொலை செய்வதற்கு இந்திய அரசுடன் கூட்டுச் சேர்ந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகவும் உச்ச நீதிமன்றத்தில் நிகில் குப்தா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கூறப்பட்டுள்ளது.



குப்தாவின் விடுதலைக்காக இந்த விவகாரத்தில் இந்திய அரசு தலையிட்டு நியாயமான சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்ட உதவிகளுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று குப்தாவின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனுடன், அமெரிக்கா மற்றும் செக். குடியரசில் தனக்காக வாதாட ஒரு இந்திய வழக்கறிஞரையும் குப்தா கோரியுள்ளார்.

### பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றி விசாரிக்க இந்தியா சார்பில் சிறப்புக் குழு

வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், “அமெரிக்க குடிமகனைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் குற்றச்சாட்டுகளை இந்தியா தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளது,” எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த குற்றப்பத்திரிகையில் எந்த இந்திய அதிகாரியின் பெயரும் குறிப்பிடப்படவில்லை என்று அரிந்தம் பாக்சி செய்தியாளர்களிடம் பேசிய போது தெரிவித்தார்.

அப்போது பேசிய பாக்சி, “அமெரிக்காவுடனான இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த பேச்சுவார்த்தையின் போது, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள், பயங்கரவாதிகள், ஆயுத வியாபாரிகள் மற்றும் பிறரின் தொடர்பு குறித்து அமெரிக்க தரப்பு சில உள்ளீடுகளை பகிர்ந்து கொண்டதாக நாங்கள் ஏற்கனவே கூறியுள்ளோம். இதை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுவை இந்தியா அமைத்துள்ளது,” என்றார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னதாக, சீக்கிய பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா குற்றம் சாட்டியது இங்கே கவனிக்கத்தக்கது.

### யார் இந்த குர்பத்வந்த் பன்னூன்?

அமெரிக்காவைச் சேர்ந்த குர்பத்வந்த் சிங் பன்னூன் என்பவர் ‘ஜஸ்டிஸ் ஃபார் சிக்ஸ்” அமைப்பின் நிறுவனர் மற்றும் வழக்கறிஞர்.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தை தனிநாடாக மாற்றவும், காலிஸ்தான் என்ற தனிநாட்டை உருவாக்கவும், பஞ்சாபியர்களுக்கு சுய நிர்ணய உரிமையை வழங்கவும் இந்த அமைப்பை பன்னூன் நிறுவி, தமது கோரிக்கைகளுக்கான “பொது வாக்கெடுப்பு-2020’ பிரச்சாரத்தைத் தொடங்கினார்.

இதன் கீழ், இந்தியாவின் பஞ்சாப் மாநிலம் மற்றும் உலகெங்கிலும் வசிக்கும் சீக்கியர்கள் ஆன்லைனில் வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஆனால் வாக்களிப்பதற்கு முன்பே, இந்த அமைப்பு மற்றும் காலிஸ்தானுக்கு ஆதரவான 40 இணையதளங்களை இந்திய அரசு தடை செய்தது.

இந்த அமைப்பு தன்னை ஒரு மனித உரிமை அமைப்பு என்று அடையாளப்படுத்திக் கொள்கிறது, ஆனால் இந்தியா அதை ‘பயங்கரவாத’ அமைப்பாக அறிவித்துள்ளது.

பன்னூனிடமிருந்து வந்த மிரட்டல் வீடியோக்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் தொடர்பாக இந்தியாவின் பல்வேறு விசாரணை அமைப்புக்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி, பன்னூன் கடந்த 2020 ஜூலையில் இந்தியாவால் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டார்.